வேதாந்தி



இருளின் நிழலில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூன்றாவது மனிதன்' வெளியீடு - 3

இருளின் நிழலில்

(கவிதைத் தொகுப்பு)

வேதாந்தி

1/10/97

10677. SC

பொது நூலகம் யாழ்ப்பாணம் விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title: "IRUZHIN NIZHALIL"
(A Collection of Poems)

Author: VETHANTHY
(M.H.Cegu Isadeen)

Published By: Moonravathu Manithan Publication(C)
No.27, A.V.V. Road,
Akkaraipattu - 02 (32400)
Sri Lanka.

Cover Photo: NATIONAL GEOGRAPHY

Printed By: Techno Print
No.83, Hospital Road,
Dehiwala.

Price : Rs.100/=

First Edition: 15 August 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமர்ப்பணம்

எனது தாயார்
ஸெய்யது அப்துர் ரஹ்மான் மௌலானா
சுபைதா உம்மா -
அவர்கள் ஊடாக
எல்லாத் தாயார்களினதும்,

எனது தந்தையார்
மர்ஹூம்
சின்னகமது லெப்பை உடையார்
முஹம்மது ஹஸன்
அவர்கள் ஊடாக -
எல்லாத் தந்தையர்களினதும்
பிள்ளைப் பாசத்துக்கான
எனது
கண்ணீர்க் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''**மூன்றாவது மனிதன்**'' வெளியீட்டகத்தின் மூன்றாவது தொகுதி இது!

குறிப்பிட்ட சிறு காலத்தினுள் மூன்று நூல்களை வெளிக் கொணர்வது என்பது இன்றைய எமது ஈழத்து தமிழ் இலக்கியச் சூழலில் பெரும் போராட்டம் தான். இருந்தும் அனைத்தையும் எதிர்கொள்வதற்கான திடசங்கற்பத்துடனும் எதிரே விரிந்து நிற்கும் சவால்கள் நிறைந்த காலத்தை சந்திப்பதற்கான துணிவுடனும் புறப்பட்ட உழைப்பிற்கும் முயற்சிக்குமிடையே - இது தொடக்கப்புள்ளிதான்.

வேதாந்தியின் கவிதைகளை நான் தொகுப்பாக வெளிக் கொணர்வது இரண்டு எழுத்தாளர்களுக்கிடையேயான சடங்கு முறை உறவினால் அல்ல. மாறாக கருத்தியலுடன் கூடிய விமர்சனத்திற் குள்ளாக்கப்படும் பார்வையும், சிறுமைகண்டு பொங்கி எழும் மனமும், அவரின் எழுத்திலுள்ள ஞானமும் நுட்பமும், மொழியின் கையாள்கையும் அவருடன் எனக்கு எப்போதும் நெருக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கிறது.

60களில் எழுதத்தொடங்கிய வேதாந்தியின் கவிதைகளை 85களில் எழுதத் தொடங்கிய நான் தொகுப்பாக போடுவதென்பது - இரண்டு தலைமுறைகளுக்கிடையிலான இடைவெளியை அவர் தனது எழுத்தின் மூலமும் சிந்தனையின் மூலமும் அகலப்படுத்திய தில்லை என்பதை நிரூபணமாக்குகிறது.

60 தொடக்கம் 80 வரையான இரண்டு தசாப்த கால ஈழத்து தமிழ் கவிதைப் பரப்பில் மஹாகவி, முருகையன், நீலாவாணன், சில்லையூர், சண்முகம் சிவலிங்கம், நுஃமான், மு.பொ., சிவசேகரம், ஜெயபாலன், யேசுராசா, வில்வரத்தினம், சேரன் போன்றவர்களுடன் பேசப்பட்டிருக்க வேண்டியவர் வேதாந்தி. துரதிருஷ்ட வசமாக இவர் அதிகம் வெளிக்காட்டப்படவில்லை. தன்னார்வம் கொண்டு தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மாவுடன் பேசிக் கொள்ளும் இவரது அநேக கவிதைகள் - இவருடனேயே சமாதி கொண்டுவிட்டிருக்கின்றன.

சூரியனை கைகளினால் மறைத்துவிட முடியாது! இன்று வேதாந்தியின் கவிதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது.

இவரால் எழுதப்பட்ட அனைத்துக் கவிதைகளையும் தேடி எடுக்க முடியவில்லை. இவரால் அழித்துவிடப்பட்ட கவிதைகள் அநேகம்.

காலத்தின் சித்து விளையாட்டினுள் இக்கவிஞனின் சிந்தனைக்கும் ஞானத்திற்கும் மோதலுக்குமிடையில் தப்பி நின்ற கவிதைகளை தேடி எடுத்துத்தான் இக்கவிதைத் தொகுதி பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இக்கவிதைத் தொகுதியின் கவிஞனை தரிசிப்பதற்கு இத்தொகுதியிலுள்ள ஒரு கவிதை போதுமென்றே நம்புகிறேன்!

நவீன தமிழ்க்கவிதை பல்வேறு பரிமாணங்களையும் மாற்றங்களையும் கண்டுவிட்ட இன்றைய சூழலிலும் கூட இவரின் கவிதைகளை ஒரு காலவரையறைக்குள் வைத்து நோக்கும் போது இவர் எம்முடனேயே நிற்கிறார்.

இக்கவிதைத் தொகுதியை பதிப்பிப்பதன் ஊடாக நீண்ட வர்லாற்றைக் கொண்ட தமிழ்க் கவிதை வரலாற்றில் வேதாந்தியின் பணியையும் பங்களிப்பையும், பதிவாக்கியுள்ளேன் எனும் போது சந்தோசமடைகிறேன். பொய்மை நிரம்பிய காலத்தின் இருட் குகையினுள் ஒரு உண்மையான சத்தியக் கலைஞனை புதைத்துவிட முடியாது!

இத்தொகுதியிலுள்ள கவிதைகளை ''டைப்செற்'' செய்து தந்த ரேவதிக்கும், அட்டைப்பட வடிவமைப்பைச் செய்த ஏ.எம்.றஷ்மி அவர்களுக்கும் அச்சிட்ட நண்பர் தியாகராஜா அவர்களுக்கும் முன்னுரை எழுதிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுக்கும் - இத்தொகுதியை வெளியிட அனுமதியளித்த வேதாந்தி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

1997.08.12

எம்.பௌசர்
பதிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும்
மனம் திறந்து........

கவிஞர் எம்.பௌசரின் முயற்சியினால் எனது கவிதைகளிற் சில நூலுருப் பெறுகின்றன.

ஏனைய கவிதைகளுக்கு என்னவாயிற்று என்பது தெரியவில்லை - நான் தேடவுமில்லை.

பாதிக்கும் குறையாத கவிதைகளை இருபது ஆண்டுகளுக்கு முன் எரித்து இலக்கிய அஸ்தியாக்கி திருப்திப்பட்டது ஞாபகத்துக்கு வருகிறது. அது ஒரு கிறுக்குத்தனத்தின் வெளிப்பாடு. இளமைக் காலத்தின் உயிர்த்துடிப்பு மிகுந்த கவிதைகள் அவை. அதற்காய் நான் வருந்தவில்லை.

சாதாரண மக்களிலிருந்து வேறுபட்டு, சராசரியான நியமங்க ளிலிருந்து விலகி நடக்கும் படைப்பாளிகளுக்கு உள்ள பொதுவான கிறுக்குத்தனம் எனக்கும் இருந்தது. பொது மக்களை விட தாம் ஒரு மேம்பட்ட ஜாதி என்ற கர்வமும் படைப்பாளிக்குச் சொந்தமானது தான். இவையெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்ட குணாம்சங்கள்.

கவிதைகள் நூலுருப் பெற வேண்டும்: இலக்கிய உலகின் மயான மைதானத்தில் கண்ணுக்குத் தப்பாத ஒரு கல்லறையில் 'கவிஞன்' என்று என் பெயர் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்பதிலெல்லாம் ஆதியிலிருந்தே எனக்கு ஆர்வம் இருக்கவில்லை.

கவிதைகளுக்குக் கிடைத்த மதிப்பும் மரியாதையும், அவை எவ்வளவு ஆழமாக ரசித்து அனுபவிக்கப்படுகின்றன என்பது பற்றிய எனது அவதானமும் கணிப்பும் என்னைச் சலிப்படையச் செய்தன.

நம் நாட்டின் பல சிறந்த கவிஞர்கள் இருக்கிறார்கள்; இருந்திருக் கிறார்கள். அற்புதமான கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றுக்குக் கிடைத்த வரவேற்பை நினைத்துப் பார்த்தபோதெல்லாம் மனது உற்சாகம் இழந்தது.

சாதாரண பொதுமக்களிடம் கவிதைகளுக்குப் பெரும் வரவேற்பு இருக்க முடியாது தான். ஆயினும் படிப்பாளிகளிடம் கூட கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக ஒரு மந்தப் போக்கு இருப்பதைத் தான் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

உலகிலுள்ள கலைகளிலெல்லாம் மிக உன்னதமான கலை கவிதை ஆகும்.

இசையில், நடனத்தில், ஓவியத்தில், சிற்பத்தில் ஏற்படும் ரசனையையும், பிரமிப்பையும் விட நீடித்து நினைவில் நிற்கக் கூடிய உன்னதமான ரசனையையும், பிரமிப்பையும் ஏற்படுத்தக் கூடிய கலை கவிதை தான்.

கேட்கும் போதோ, பார்க்கும் போதோ மட்டும் மேலோட்டமான உணர்வுகளில் கிளர்ச்சியை ஏற்படுத்தி பரவசப்படுத்திவிட்டுச் செல்லும் கலையல்ல கவிதை.

ஜனரஞ்சகமான கலையாக கவிதை இருக்க முடியாமல் போவதற்கும் அதுதான் காரணம். சில கோஷ உணர்வுகளைக் கருப்பொருளாக்கி, பாமர மக்களுக்கென்று எழுதப்பட்ட கவிதைகள் ஜனரஞ்சக அந்தஸ்தைப் பெற்றுள்ளன. எனினும் கவிதையின் இறுக்கமும் உருக்கமும் அதிகரித்து கவிதை கூர்மையடைந்து கொண்டு செல்லும் போது அது சராசரி மனிதனை விட்டும் விலகிச் செல்லும் பண்பையே கொண்டிருக்கிறது.

நடனம், ஓவியம், சிற்பம் போல் கவிதை வெளிக்கண்ணுக்கு விருந்தளிக்கும் படையல் அல்ல. அல்லது இசையைப் போல் புறக்கேள்விப் புலனுக்கு விருந்தளிப்பதுமில்லை. மேலும் கவிதையின் நெளிவு சுளிவுகள் மேற்பரப்பில் ஸ்பரிசிக்கக் கூடியவையுமல்ல.

கவிதை ஆழத்தில் அக உணர்வுடன் தொடர்புடையது. அக நோக்கும் அக ஸ்பரிசமும் கொண்டது.

கவிதை, அனுபவத்தின் இசை வடிவமாகும். உணர்ச்சியின் நடனமாகும். சிற்பத்தைப் போல ஒரு கவிதையினால் ஒரு பாவத்தை செதுக்கி நிறுத்த முடியும். இன்னும் ஓவியத்தைப் போல ஒரு கவிதையினால் ஒரு காட்சியை வர்ணப்படம் பிடித்துக் காட்ட முடியும்.

ஒரு வாசகனின் கூர்மையான அறிவாலும் பரந்துபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவங்களாலுமே இந்த ஒலி, ஒளி உணர்வுக் காட்சிகளை கண்டு அநுபவித்து ரசிக்க முடியும்.

ரசனையின் மட்டம் ரசிகனின் ஞானானுபவ மட்டத்துக்கு நேர்விகிதமானது.

இதனால் தான் மிக அற்புதமான கவிதைகள் ஜனரஞ்சகமாக இருப்பதில்லை. பொது மனிதர்களிடத்தில் செல்வாக்குப் பெறுவதில்லை.

கவிஞர்களின் அறிவுக்கும் அநுபவத்துக்கும் சொல்லாட்சிக்கும் இயல்புக்குமேற்ப கவிதைகள் கன பரிமாணம் பெறுகின்றன. தமது கற்கையையும் வித்துவத்தையும் கவிதைகளில் அடைத்து இறுக்கும் கவிஞர்கள் வாசகர் வட்டத்தை மிகவும் குறுகச் செய்து விடுகின்றனர். பொது மக்களை வேண்டுமென்றே விலக்கி வைத்துவிடுகின்றனர்.

கவிதைகளுக்கும் வாசகர்களுக்குமிடையில் புரிந்துணர்வுப் பாலமொன்று அமைக்கப்படுவது அவசியம். ஒரு கவிதை எவ்வாறு ரசிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய அறிவே ஒரு கலையாகும்.

கவிதைகளின் அழகையும், தரத்தையும் அநுபவித்து ரசிப்பதற்கு தமிழில் பாடநெறிகள் போதுமான அளவில் இல்லை.

இன்று விஞ்ஞானம், தொழில் நுட்பம், கணனி சாத்திரங்களின் ஆக்கிரமிப்பினால் ஆழமான மொழி அறிவு புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இது இலக்கிய உலகுக்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பாகும்.

ஆரம்பக்கல்வி, உயர்கல்வி என்பவற்றில் தமிழ் மொழியோடு பழைய இலக்கியங்களையும் உள்ளடக்கிய இலக்கியம் தனிப்பாடமாகவும் கட்டாய பாடமாகவும் கற்பிக்கப்படவேண்டும்.

பல்கலைக்கழக மட்டத்தில் ரசனை இலக்கியம் ஒரு துறையாக விரிவுபடுத்தப்பட வேண்டும்.

மனிதர்களிடம் அழகுணர்ச்சிக்குப் பதிலாக வெற்றுக்காம உணர்ச்சியும், மனித நேயத்துக்குப் பதிலாக ஆயுதக் கலாசார வெறியும் தூபம் போடப்பட்டு அறியாமலேயே வளர்க்கப்பட்டு வருகிறது. மனிதர்களிடம் ஆழ்ந்த மனிதாபிமான உணர்வும் பொதுவான சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளும் அருகி வருவதற்கு இலக்கியத்தை விட்டும் மனிதர்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதே காரணமாகும்.

பழைய இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவில் கூட இன்றுள்ள கவிஞர்களிடமே இலக்கிய, மொழியறிவு குறைவாகவே இருக்கிறது.

அதனாலேயே கலாபூர்வமான ஆடைகளையும், அணிகலன்களையும் கழைந்து கருத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து கவிதை நிர்வாணமாக்கப்பட்டு யந்திரத்தன்மை பெற்றுள்ளது.

இன்றையப் புதுக்கவிதைகளில் பெரும்பாலானவற்றை படிக்கும் போது இனிவருங்காலத்தின் நவீன கவிதைகள் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்த்து மனது சங்கடப்படுகிறது.

எல்லாக் கவிஞர்களுக்கும் ரசிகர்கள் உண்டு. குறைந்த பட்சம் கவிஞனே அவனது கவிதையின் முதலாந்தர ரசிகனுமாவான்.

என் கவிதைகளுக்கும் ரசிகர்கள் உண்டு.

என் நண்பர்களில் சிலர் எனது கவிதைகளைத் தொகுப்பாக்கி நூலுருவில் பார்க்க விரும்பினர். அதனை நானே செய்ய வேண்டும் என்ற அவர்கள் எதிர்பார்ப்பு நிகழவில்லை

எனது அன்பர்கள் சிலரும் அவ்வாறு விரும்பியிருந்தனர். எனது தகுதிக்குரிய பட்டம் பதவியை, அந்தஸ்தை என்னை அடையச் செய்வதற்காய் அவர்கள் முயன்றனர். அதற்குரிய ஒத்துழைப்பு என்னிடமிருந்து செல்லவில்லை.

எதற்கும் ஒரு வேளை இருக்கிறது. அந்த நிமித்த நேரம் எம்.பௌஸர் உருவிலேயே வந்து சேர்ந்தது. எதுவுமே தட்டிக் கழிக்கப்படாமல் எல்லாமே கைகூடி வந்திருக்கிறது.

எம்.பௌஸருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இந்தத் தொகுப்பு இலக்கிய உலகில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துமானால் அதுவே பௌஸரின் சேவைக்குரிய அன்பளிப்பாகும்.

இந்தத் தொகுப்பில் உள்ள கவிதைகள் மூன்றுக்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதுடையவை. என் பருவகால மாற்றங்களை என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் சொல்ல முயலும்.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் காலத்தின் கதைகளைச் சொல்பவை, காலத்துக்குக் கட்டுப்படாதவை - மரபைத் தொடர்ந்தவை, புதுவழியை மிதித்தவை - தமிழோடு சரஸம் புரிந்தவை, தமிழுக்குச் சரணடைந்தவை. - தனிமனித உணர்வு களுக்கு சாட்டாங்கம் செய்தவை, பொது மனித உணர்வுகளை படம் பிடித்தவை - தானாகப் பிறந்தவை, சத்திர சிகிச்சை ஊடாகப் பிரசவித்தவை - முழுமையானவை, குறைப்பிரசவமானவை - மூடம் கலந்தவை, ஞானம் புணர்ந்தவை என்று பல ரகங்களிலும், பல தரங்களிலும் இருப்பதை ஒரு படைப்பாளியாக இல்லாமல் ஒரு படிப்பாளியாய் இருந்து நான் பார்க்கிறேன்.

சில கவிதைகள் எழுதப்பட்ட காலம், சந்தர்ப்ப சூழ்நிலைகள் அக்கவிதைகளைப் புரிந்து கொள்ள உதவும், வரலாற்று ரீதியான விமர்சனப் பார்வைக்கு அது அவசியமானதும் கூட.

ஒரு நீண்டகால இவைவெளியில் எழுதப்பட்ட கவிதைகளாய் இருப்பதானால் அடிக்குறிப்பு தேவைப்படும். பிரபஞ்ச ரீதியான உணர்வுகளை பிரதிபலிக்கும் கவிதைகளுக்கு அடிக்குறிப்பு அத்தியா வசியப்படா. எல்லாருக்கும் பொதுவான உணர்வுகள் அவை.

எனது கவிதைகளைப் பலவிதமான மனநிலையில் பற்பல புனைப்பெயர்களில் நான் எழுதியிருக்கிறேன்.

முப்பது வருடங்களுக்கு முன்னால் பள்ளி செல்லும் நாளிலேயே 'வேதாந்தி' என்று எனக்குப் புனைப் பெயரை நான் தெரிந்து கொண்டது பற்றி இன்றும் வியப்போடு எண்ணிப் பார்க்கிறேன். நான் எழுதிய சிறுகதைகள் எல்லாவற்றையும் ''வேதாந்தி'' என்ற புனைப் பெயரிலேயே எழுதி வந்தேன். எனது சிறுகதைகள் எல்லாமே எனக்குத் திருப்தியானவை.

என் கவிதைகள் எல்லாமே எனக்குத் திருப்தி தருகின்றவை என்று என்னால் சொல்ல முடியவில்லை. எழுதும் போதும், எழுதிய உடனேயும் அவை திருப்தி தந்தவையாய்த்தானிருக்கும். அவற்றில் நான் புகுத்தி வைத்திருந்த பொருளுக்கு, பொருளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பரிமாணத்துக்கு நான் இன்று அந்நியனாகிவிட்டது போல் தெரிகிறது.

'கவிதை ஒன்று பிரசவமாகும் போது அத பற்றி கடவுளுக்கும் கவிஞனுக்கும் மட்டுமே முழுவதும் தெரியும். அதற்குப் பிறகு கடவுளுக்கு மட்டும் தான் அது முழு வெளிச்சமாகும்' என்று சொல்லப்பட்டதன் உண்மையை உணர்கிறேன்.

மு.ஹ.ஷெய்கு இஸ்ஸுதீன் என்ற பெயரில், வேறு பல பெயர் களிலும் எழுதிய எனது கவிதைகளிற் சிலவும் இத்தொகுப்பில் அடங்குகின்றன.

அப்படியெல்லாம் ஏன் எழுதினேன்? என்பதற்கான காரணங்கள் என் நினைவில் இல்லை. அது அவ்வளவு முக்கியமானது அல்ல.

என்னை அடையாளம் காட்டிக் கொண்டு எழுதிய போதும், என்னை ஒளித்துக் கொண்டு எழுதிய போதும் என் எழுத்துக்கு விசுவாசமாய் நான் இருந்திருக்கிறேன்.

நான் எழுதிய கவிதைகளைப் போல, என்னை எழுதிய கவிதைகளும் உண்டு.

நான் கொண்டாடும் கவிதைகளும், நான் சலித்த கவிதைகளும் உண்டு.

எஞ்சி என்னிடமிருந்த எல்லாக் கவிதைகளிலும் இத்தொகுப் புக்குத் தேவையென்று தெரிவு செய்யும் பொறுப்பையும் பௌஸரே மேற்கொண்டார். நான் தலையிட விரும்பவில்லை.

இந்தத் தொகுப்பே எனது கவிதைகளின் முதலும் முடிவுமான தொகுப்பாயும் இருக்கலாம்.

எனினும் என்னுள் இன்னும் ஒரு கவிஞனும், ரசிகனும், விமர்சகனும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

பெயருக்காக அல்லாமல் கலைக்காகவும், மனித குல மேம்பாட்டுக் காகவும் நான் எழுதிக் கொண்டே இருப்பேன், இறப்பேன் என்று சொல்ல எனக்கு விருப்பமாக இருக்கிறது.

எனக்குத் தகுமான ஒரு அந்தஸ்து எனக்குக் கிடைக்கவில்லை என்பதை விட எனக்குத் தகுதியில்லாத ஒரு அந்தஸ்தை நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துவிடக் கூடாது என்பதில் நான் எச்சரிக்கையோடு இருக்கிறேன்.

இந்த நேரத்தில் இலக்கியத்துக்காய் தம்மை அர்ப்பணித்துள்ள அனைவரையும் நான் மிகுந்த நேச உறவோடு நினைத்துக் கொள்கிறேன்.

அதேபோல் எவ்வளவோ சிறந்த கவிதைகளை - இலக்கியங்களை - படைத்து அவற்றுக்கு நூலுருக் கொடுக்க முடியாமல் தம்முள் சுருண்டு போயுள்ள அனைத்துப் படைப்பாளிகளினதும் அபிலாஷைகள் ஒரு நாள் - விரைவில் - நிறைவேறும் எனப்பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

எனது உள்ளுணர்வில் மனித நேயத்தைக் கலந்து கவிதையை என் உணர்வு வெளிப்பாட்டுக்கு வாகன மாக்கி என்னை வழிநடாத்தும் என் உள்ளத்தைக் கடந்த இறைவனுக்கும், எனக்குத் தமிழில் ஆட்சி தந்த என் ஆசான்களுக்கும், என் கவிதைகளுக்கு நாயர்களாய், நாயகி களாய், கருவாய் இருந்த அனைவருக்கும், என்னைப் புடம் போட்ட என் அநுபவங்களுக்கும் என் கவிதைகளை உரிமை விடுகிறேன்,

எம்.பௌஸருக்கு என் நன்றி.

'விருந்து முடிய
விளக்கும் அணைய
வீழும் நீழல்
உனதே - கவிதா
இந்த இரவும்
உனதே'

- யாரோ-

வேதாந்தி
27, முகிடீன் மஸ்ஜித் வீதி
மருதானை, கொழும்பு - 10,
இலங்கை.
தொலைபேசி - 434141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இருளின் நிழலில்''
கவிதைத் தொகுதி பற்றிய மனப்பதிவுகள்

இன்று கவிதை எழுதுவதைப் போலச் சுலபமான காரியம் வேறெதும் இருக்க முடியாது. காரணம் அதன் வடிவம் மிக மிக நெகிழ்வானது. ஒரு சிறு உணர்வசைவு கூடக் கவிதைப் பதிவுக்குப் போதும்.

அதேவேளையில் கவிதை எழுதுவது போன்ற மிகச் சிக்கலான சிரமமான படைப்பு முயற்சியும் இருக்க முடியாது. ஏனெனில் கவிதையையே தனது ஆளுமை வெளிப்பாடாகக் கொள்ளும் ஒருவர், தனது உணர்ச்சிகளையும் அந்த உணர்ச்சிகள் தரும் ''உ்ணர்வு''களையும் சொல்லினாலும் சொல் ஒழுங்கினாலும் எடுத்துக்கூறி அந்தச் சொல்லொழுங்கினூடாக வந்து அதனை மீறி நிற்கின்ற உணர்ச்சி அதிர்வுகளை வாசகரிடத்து / கேட்பவரிடத்து கையளிப்பது (Transmit) என்பது சுலபமான படைப்புத்திறன் அல்ல.

அதற்கு உண்மையான ஒரு ''கவிஞர்'' வேண்டும். இதனாலேதான் நான் கவிதை எழுதுபவர்கள் எல்லோரையும் கவிஞர்களாகக் கொள்வதில்லை. - ''கவிஞர் எனும்பொழுது அவரது ஊடகம் கவிதை மாத்திரமாகவே இருக்க வேண்டும்.

இன்னுமொரு முக்கியமான விடயம் உண்டு. கவிதையால் மாத்திரமே எடுத்துச் செல்லப்படத் தக்கவை சில உள்ளன. அதுவும் தற்கால இலக்கிய வரலாற்றில் கவிதையில் இந்தச் சிறப்புத் தொழிற்பாடு (Specialiation) மிக முக்கியமான ஒன்றாக அமைந்து விட்டது. இதனாலேயே கவிதையில் இப்பொழுது ''கவிதை சொல்லல்''கள் இல்லை. அதற்கெனத் தனி வடிவங்கள் உள்ளன.

கவிதை கவிதையாகவே இருத்தல் வேண்டும். கவிதை என்பது உணர்வுத் தளத்தில் நின்று கொண்டு உலகத்தை, தன்னைப் பார்க்கும் தொழிற்பாட்டின் உணர்ச்சிநிலை வெளிப்பாடாகும். இதனாலேதான் உணர்ச்சிதான் கவிதையின் மொழி என்பார்கள்.

உணர்ச்சி மாத்திரமல்ல, அந்த உணர்ச்சியினூடே ஒரு ''உணர்வுத் தெளிவு, ஒரு கவித்துவக் கைகூடுகை (Poetic realisation) நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான கவிஞர்களின் இலட்சினை இதுதான்; அவர்களின் ஆக்கங்களில் ஒரு கவித்துவக் கைகூடுகை நிகழ்ந்து விடும்.

நான் அண்மைக் காலத்தில் வாசித்த கவிஞர்கள் (கவிதைகள் எழுதியோர் பலருள்) இந்தக் கைகூடுகை செம்மையுடன் நிகழ்ந்திருப்பது வேதாந்தியின் கவிதைகளில் ஆகும். வேதாந்தியை நிச்சயமாக எமது காத்திரமான கவிஞர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை இத் தொகுதி வலியுறுத்துகின்றது.

வேதாந்தியின் இந்தக் கவிதைத் தொகுதியினூடே இரு உணர்வு வீச்சுக்கள் கொண்ட "ஒரு மனிதனைக் காண்கின்றோம்.

ஒன்று "புற" உலகைப் பார்த்து அதன் பொய்மைகளைப் பார்த்து மனம் சோர்ந்து "நிற்கின்ற ஒரு மனிதனின்" துலங்கல்கள் (Responses). மற்றது, தனது உணர்ச்சிகளுக்குள்ளே தானே தோய்ந்து முழுகியெழும் மனிதனது அவதானிப்பின் அதிர்வொலிகள் (Observation). இது முற்றிலும் "அக" நிலைப்பட்டது. ஆனால் இந்த அகமும் புறமும் ஒன்றிற்கொன்று எதிரிடையாக நிற்காமல், ஒன்று மற்றதைப் புடம் தருவதாக உள்ளது. இதற்கான உதாரணங்களாக முதலாவது கவிதையையும் **(மெய்யாய் ஓரோர் கணம்) "நாம் எனும் வேஷதாரிகள்"** என்னும் கவிதையையும் கூறலாம்.

சரியைப் போல்
பிழைக்கும் ;
நன்மையைப் போல் தீமைக்கும்
நம்பிக்கையைப் போல்
அறிவுக்கும்
கருணையைப் போல்
கொடுமைக்கும்
உண்மையைப் போல்
பொய்க்கும்
ஆதியுமில்லை
அந்தமுமில்லை
அதனால்
மூலமும்
வேஷமும் ஒன்றாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பண்பு இக்கவிதைத் தொகுதியினூடே பாலில் நெய்போல் உள்ளது. இந்த இரண்டும் இணைகின்ற போது கிளம்புகின்ற ''ஒளி'' நம்மைச் சூழவுள்ள பலவற்றைப் பளிச்செனக் காட்டுகின்றது.

உதாரணம் ''அனர்த்தம்'' என்ற கவிதை.

நேற்றைய நினைவுகள்
நெஞ்சில் மாய்ந்தன
நேற்றுகள் மாறின
நேற்றிலும் இல்லைதான்''

இந்தக் கவிதைத் தொகுதி மூலம் வெளிக்கிளம்பும் வேதாந்தியின் ஆக்க ஆளுமையில் (Creative personality) காதலுணர்வும் முதுமையுணர்வும் ஒன்றினுள் மற்றது ஒளிந்து கிடப்பதுவும், காதல் உணர்வு சிலவற்றிலும், முதுமையுணர்வு சிலவற்றிலும் மேலோங்கி நிற்பதுவும் நன்கு தெரிகின்றது. கவிதைகளைக் கால அடைவில் அச்சிட்டிருப்பின் இந்த ஆக்க ஆளுமைச் சிக்கலின் வளர்ச்சியை நன்கு அவதானித்திருக்கலாம்.

முதுமை பற்றிய பிரக்ஞை பல இடங்களில் குத்திட்டு நிற்கின்றது.

''மரணத்தை வென்று''
''கவிதா''
''கூடாவரம்''

முதுமை பற்றிய பிரக்ஞையுடன் வரும் கவிதைகள் காலத்தால் பிந்தியவையாக இருத்தல் வேண்டும்.

இந்த முதுமையுணர்வு ஒரு கையறு நிலையாக மாறாமல் ஆத்ம முதிர்வுக்கான ஒரு படிக்கட்டாக அமைவதும் நன்கு தெரிகின்றது.

வேதாந்தியின் இந்தக் கவிதைத் தொகுதியில் அவதானிக்கப்படத்தக்க முக்கிய அம்சங்களில் ஒன்று இக் கவிதைகளின் மொழியில் இந்துப் படிமங்களும், இஸ்லாமியப் படிமங்களும் வெகு லாவகமாக, ஆனால் ஒன்றின் தனித்துவத்தை மற்றது பாதிக்காத முறையிலே கையாளப் பட்டிருப்பதுதான். இந்த இணைவை ''ஜிஹாத்'' கவிதையிற் காணக் கூடியதாக உள்ளது.

உண்மையைச் சொன்னதற்காய்
பிர்ஒளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் சிறையிலிடட்டும்
பதவிக்காய் காட்டிக் கொடுக்கும்
சாமூரி நானல்ல...

என்று இஸ்லாமியப் படிமங்கள், குறியீடுகளுடன் ஆரம்பிக்கும் கவிதை.

சத்தியத்தை அழிக்க
பிர்ஔனின் சந்ததிகள்
கை ஓங்கும் போது,
தர்மத் தேரில்,
போர்க்கோலம் பூண்டு
மூஸாவின் சந்ததிகள்
வெளியே வருவார்கள்.
சத்தியம் வெல்லும்!
நிச்சயமாக
அசத்தியம் அழியும்!

இங்கு மகாபாரதத்தின் கீதைப் படிமம் கோடிடுகின்றது

இந்தப் பண்பினைக் ''கூத்து'' ''பிரார்த்தனை'' ''காலப் பிரசாதம்'' ஆகிய கவிதைகளிலேயும் காணலாம். ''கூத்து'' இஸ்லாத்தின் படிமங்களில் ஒன்று அல்ல. அது இந்து மதப் படிமம்.

இந்தப் படிம இணைவுகளைப் பார்க்கும் பொழுதும் ''வேதாந்தி'' என்ற புனைபெயரை நோக்கும் பொழுதும் இக் கவிஞரிடத்து நடைமுறைச் சடங்கு நிலை பேதங்களுக்கப்பாலான ஒரு ''ஸூஃபிச'ச் செல்நெறியும் சுருண்டு கிடக்கின்றது.

இந்த இணைவின் பாலமாக, இணைவின் உயிராக அமைவது ''தமிழ்''. சமகாலத் தமிழ் அரசியல்கள் தன்னை அந்நியப்படுத்த முனையும் பொழுது வேதாந்தியின் கவிதை சூர்யப் பிரகாசத்துடன் ஒளிர்கின்றது.

''தொண்ணூறின் மாதங்கள்'' ஒரு அற்புதமான கவிதை.

நான் புணர்ந்த போது
தமிழ் பெற்ற இன்பம் பற்றி
தமிழிடமே கேட்டுப் பார்
என்னைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலிருந்து பிரித்து
தமிழையும் தண்டித்துவிட
யார்
போர் முரசு கொட்டினர்?

கவித்துவத் துணிச்சலுடன் கவிதை பாய்கிறது. இந்தப் பாய்ச்சலின் இயற்கைத் தன்மையிலும் வீச்சிலும் தான் தமிழ் முஸ்லிம் உறவின் இறுக்கத்தைக் காண்கின்றேன்.

வேதாந்தியின் கவித்துவ ஓட்டம் தமிழின் சந்த மரபையும் உள்வாங்கிச் செல்கின்றது. ''பரமசுகம்'' ''பிரார்த்தனை'', ''லைலா'' ஆகிய கவிதைகள் சந்தப் பொலிவால் ''பாடல்''களாகவும் நிற்கின்றன.

வேதாந்தியின் இக்கவிதைத் தொகுப்பு அவர் கவிதைகளைக் காலவாரியான அல்லது எழுதிய திகதிகளுடன் வெளியிட்டிருப்பின் அவரது கவித்து விகசிப்பை அறிய உதவியிருக்கும். (**திசை மறந்த தீவிரங்கள், ஓர்மம், காதல்** என்பனவற்றுக்கு உண்டு.)

இக் கவிதைத் தொகுதிக்கு முன்னுரை எழுத வேண்டுமெனக் கேட்ட பொழுது வேதாந்தியின் இயற்பெயர் எனக்குத் தெரியாது. நான் வேதாந்தி என்ற கவிஞரை அவர் கவிதைகள் மூலமாகவே அறிந்து கொள்ள முயன்றேன்.

சேகு இஸ்ஸதீன் தான் வேதாந்தி என்று அறிந்த பொழுது, எனது விமர்சனப் பதிகைக்கு ஒரு விடயத்தை மாத்திரம் கூட்டிக் கொண்டேன். இக் கவிதைத் தொகுதியிலுள்ள கவிதைகளின் தலைப்புக்கள் பல சிறுகதை இலக்கியப் பண்பினை உடையவை என்பதனையும் சேர்த்துக் கொண்டேன் (**''சொப்பனம்'' ''மாதவி''** போன்றவை.)

சமூக அரசியற் பரிமாணங்கள் உள்ள ஒருவரது இலக்கிய ஆளுமையை அவரது ஆக்கங்களினூடாகவே பார்ப்பது சுவாரசியமான ஒரு முயற்சியாகும். அதற்கான வாய்ப்பு இந்த விமர்சனப் பதிகையின் பொழுது ஏற்பட்டது. பௌசருக்கும், மதுசூதனனுக்கும் எனது நன்றிகள். வேதாந்தியின் ஆக்கங்கள் சிறக்க

வருகைப்பேராசிரியர் **கா.சிவத்தம்பி**
இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகம் 26.8.97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யாய் ஓரோர் கணம்..........!

எத்தனை பேர் ஆடி
இறங்கிவிட்ட மேடையிலே
இன்றேறி ஆடுதற்கு
நீ வந்தாய், உன் நடனம்
நன்றாய் இருக்கும் -
நாள்பட்டுப் போகையிலே....?

வேறொருத்தி ஆட
விரைந்திட்டால், நீ பிறகு,
விட்டுக் கொடுக்க
விரும்பாய்; எனைப்பழிப்பாய்;
நாட்டியத்தின் அட்சரங்கள்
நானறியேன் என்பாய்.

ஊராரைக் கூட்டி
உமிழ்ந்திடுவாய்; என்னிடத்தில்,
உள்ள குறைகள்
உரைத்திடுவாய், போலியென்பாய்;
சாபமிட்டு, நானிட்ட
சத்தியங்கள் பொய்த்த தென்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட வருபவளுக்கு
அறிவுரைகள் சொல்லிடுவாய்.
இப்படித்தான் எல்லாரும்
இறங்கி விட்டார் ஆடி விட்டு.

பொய்யாய், மறைவாய்,
புகழுக்காய், ஆசைக்காய்
உள்ளபடியாய் நான்
உரைத்திருக்க வில்லையடி.
மெய்யாய் ஓரோர் கணத்தில்
மேனி சிலிர்த்ததடி.

ஆடப்பிறந்தவளே!
அந்தரங்க மேடையினைத்
தூசு தட்டிப் - பட்டுத்
துணி விரித்து மெய்மறந்து
பார்க்க இருக்கின்றேன்
'பழசு படும் உள்ளதெல்லாம்'.

ஆனாலும் ஆடு
அங்கமெல்லாம் பொங்கியெழ
கூந்தலுடன் கொங்கைகளும்
குலுங்கிச் சதங்கையுடன்,
காலாடக் கையாட
கண்விழிகள் பாய்ந்தாட
நெஞ்சாட மஞ்ச
நினைவு எழுந்தாட
ஆடு மயிலே! என்
அரங்கம் முழுவதிலும்
ஓயாமல் ஆடு
உன் கனவு மாயுமட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை மறந்த தீவிரங்கள்

யாளிக்கு வைத்தமுள்
மானுக்குத் தைத்ததில்
யாருக்கும் இன்பமில்லை - அந்த
மானின் வலியினில்
நஞ்சைக் கலந்தவர்
வாழவும் போவதில்லை.

மான் பின் மறையினை
மோதி இடிக்கையில்
மானுக்கோர் திட்டமில்லை - வலி
வாட்டப் பகையை
வளர்த்த நரிகளின்
வஞ்சகம் பொய்க்கவில்லை.

வேடனை ஊட்டிய
மறையினை மான்முட்ட
வேடன் வெகுண்டெழுந்தான் - அந்த
வெண்புள்ளி மானுக்குப்
பாடம் புகட்டிட
யாளி தனைமறந்தான்

வேலுடன் வில்லுடன்
வெஞ்ச நெருப்புடன்
வேடன் வெகுண்டெழுந்தான் - உயர்
வேட்டைகள் கண்டிடக்
கொண்டதோர் யாத்திரை
வீணாய்க் குலைத்து நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானைத் தொடருதல்
லாபமோ? வீண் இன
மாயையில் மூழ்கலாமோ - மட
மானும் மரையினம்
யாவும் ஒரேயினம்
மதியை இழக்கலாமோ

மெல்ல நுழைந்த அக்
குள்ள நரிச்சதி
வெல்ல இடங் கொடுத்தால் - மிக
மேன்மையாய்ப் போற்றிடும்
ஒற்றுமை மாண்டிடும்
மேலும் பகை வளர்த்தால்.

வேடனே நீ ஒரு
மூடனோ? உன் பணி
வெற்றுக் கவலரமோ - முழு
விரலை ஒடித்த பின்
வீணையை மீட்டிடும்
வெறியை வளர்க்கலாமோ!

போடு உன் காழ்ப்பினை
தேடு உன் பாதையை
போனது போகட்டுமே - இனிப்
புத்துலகத்தொளி
வீழும் வழியினில்
யாத்திரையைத் தொடரு.

(* '85 இன் தமிழ் - முஸ்லிம் கலவரங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணாகதி

ஊனச் சதையின்
உறுதியும் மாறி
ஓடுங் குருதியின்
ஓட்டமும் மாறி
உளையும் மனத்தின்
உணர்வும் மாறி
உள்ளும் புறமும்
ஆசையும் மாறி
வாழ்வின் பாதை
வரட்சியில் இருள
வதைவில் அழியும்
என் விளக்கதனின்
எண்ணெயும் மண்டி
எரிதிரி அருகையில்
உன்னொளி பரப்ப
ஓடி வாராயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்மம் காதல்

நினைவில் வழுகி இருளில் கலக்க நீ சென்றால்
நெஞ்சின் அடியில் துளிர்த்த அரும்பு மலராது
எதிர்க்கும் காலம் எதையும் பறிக்கும் என்செய்வாய்!

முள்ளில் வளரும் அரிய மொட்டு மலர்கொள்ள
முயலும் போது இதழ்கள் சிதைக்கும் கீறல்கள்
வழியும் குருதி. தரிசனத்தில் என் செய்வாய்!

கண்ணி கீழ். கையம்பு நேர்கொள் வேடர்கள்
காற்றில் நீ. மாடப்புறாவே எவ்விடம்?
கண்ணி காதல். அம்பு வேறு என் செய்வாய்?

ஓட்டை ஓடம், பேரலைகள், ராக்கடல்,
ஓர்மம் காதல். பயணம் எங்கோ ; ஆயினும்
ஓட்டை ஓடம், ராக்கடல், நீ என் செய்வாய்.

82/6/12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாவிடை

அன்பே,
விடை கொடு
உன் தலைவாயிலில்
முதுமைக் காற்று
முதுகைத் தழுவுகிறது.
இனிப் போயாக வேண்டும்.
விடைகொடு.

இளமை ஊஞ்சலில்
ஆசையென்றும்,
மயக்கமென்றும்,
கனவென்றும்,
களவென்றும்,
நீ இசைத்த தெம்மாங்குகளே
என் பயணத் துணை
எனக்கு விடைகொடு.

தனிமையெனும்
வெதுமணலில்
கூன் விழுந்த
கிழட்டு ஒட்டகை
அழுந்தப் புதைந்து
நகர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஓர்
பவித்திரமான யாத்திரை.
ஆதலால்,
தாமதிக்காதே,
உடனே விடைகொடு.

ஆயினும்,
என்றாவது,
எங்காவது
உன் நினைவுச் சுமையில்
களைத்து வீழ்கையில்
துணை நீர் தாகித்து
உடல் நா வறள்கையில்
பசுந்தரைக் கேங்கி
முதுவிழி
செருகையில்,
ஸ்மரணை தப்புமுன்...
ஒரு முறை,
ஒரேயொரு தடவை
எனை ஆரத்தழுவி
வரண்டு வெடித்த
என்
வறிய இதழ்களில்,
உன் பனி முத்தமொன்றை
அழுந்தப் பதித்து
என்னை உயிர்ப்பிப்பதான
வாக்குக் கொடுத்து
எனக்கு விடைகொடு.

அதற்குள்,
உன்னோடிருக்கையில்,
உன்னோடு முரண்பட்ட
கணங்களைப் பொறுத்து
மன்னித்தாயா?
ஆயின்,
''சந்திப்போம்'' என்று
விடைகொடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிது இனிது

அந்தப் பழைய ராகத்தை
பாடிக் கொண்டு வா
இளமையின் நாட்கள்
நெஞ்சை நனைக்கட்டும்.

அந்த மறக்கும் நாளின்
பாடலைப்
பாடிக் கொண்டுவா
முதுமையின் பிடியிலிருந்து
என்னை விலக்கு.

இன்று
ஆசைக்கும் உண்மைக்கும்
இடையில் விழுந்த
திரையாகி வா.
ஒரு கணம்
உண்மையை மறக்கிறேன்.

இயலாமைச் சகதியுள்ளிருந்து
கனவு நூலேணியில்
என்னை வெளியேற்று
வஸந்தத்தின் விரிந்த சிறகுகள்
என்னிதயத்தே படபடக்கட்டும்.

முதுமையை விட
மரணம் இனியதே என்று
பாடு.
நான் ஆடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணலயம்

இன்று இவள், நேற்றோடு
எத்தனை பேர் போனதன்பின்
இன்று இவள், நன்றுமிக
நாடகமே இவ்வுலகம்.

வா, வா; இதயத்தின்
வாடாத முலையதன்
உள்ளம் இருட்டில்
ஒளிந்து விளையாடிடலாம்.

பித்தன்; பெருஞ்சித்தன்
பிறவாத கூத்தாடி
ஆடி அலுக்காத
ஆட்டம்தனில் தொடர
வா விரைந்து வா இதய
வாடாத முலையிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி , மதங்கள்
சமயங்கள் சாத்திரங்கள்
போதித்தோர் கூடப்
போனவழி மீண்டதில்லை.
ஆண்டு அநுபவிக்க
யார் இருப்பார் நாள் கடப்பின்?
ஆதலினால் வா வா
ஆசை நரைக்கு முன்னர்.

வீணே பொழுதுகளை
விரைந்தோட விட்டு விட்டு
நாணம் மிகைக்க
நாளைக் கடக்கவிட்டு
ஊர் உலகம் சொல்வதற்கு
உள்ளம் கலங்கவிட்டு
பேரின்ப வாசலினைப்
பின்னர் திறந்து வைக்க
ஏனெண்ணம் கொண்டாய்
இன்னுமிங்கு எத்தனை நாள்!
வா விரைந்து, வா விரைந்து
வாடாத முலையிது.

நின்று, நிதானித்து
நீதிநெறி யோசித்து
சென்றவரும் வென்றதில்லை:
சிக்கை அவிழ்த்ததில்லை.
இன்று உள்ள நாழிகையே
இப்பொழுதின் சத்தியமாம்
என்றறிந்து வா; வா!
எண்ணமெலாம் ஈடேறும்;
நன்றறிந்து வா, வா!
நாடகமே இவ்வுலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தம்

தேடித் திரிகிறேன்.
தேடித் திரிகிறேன்
அடைந்ததை யெல்லாம்
துளாவித் துளாவி
அநுபவித்ததை
நினைத்து நினைத்து
இழந்து விட்டதை
அலசி அலசி
இருக்க வந்ததை
கணித்துக் கணித்துக்
தேடித் திரிகிறேன்
கிடைக்கவில்லை.
தேடுவ தெதுவோ
தெரியவில்லை.

நாளை கிடைக்கும்
என்று நம்பினேன்.
நாட்கள் நாளையாய்
வருடமாகின.
நேற்றைய நினைவுகள்
நெஞ்சில் மாய்ந்தன.
நேற்றுகள் மாறின,
நேற்றிலும் இல்லைதான்.
காலம் காட்டிய
மாய வித்தைகள்
கருத்தில் நின்றன
மாறின, தேய்ந்தன.
என்று, எங்கு
யாரைக் கேட்பேன்
எதனைத் தேடித்
திரிகிறேன் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10677

தூங்கு தமிழ் சோனகமே!

அன்னையே! உன்னிரு
அழகிய விழிகளில்
ஒன்றே விழித்து
உண்மை கண்டது
ஒன்றோ மூடிக்
கனவில் மாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்த கண்பட
வெடிலை வீசியும்
மூடிய கண்கெட
மோசடி செய்தும்
அன்னையைப் பங்கம்
செய்திடத் தானோ!

விரச உணர்வைப்
புதைக்க மறுத்து
விழித்த கண்ணை
அழிக்க முயன்று
கற்பினைக் கவர
காமுகன் ஊர்ந்தான்.

மூடிய கண்ணைத்
தொட்டில் ஆட்ட
மூடரை மயக்கிப்
பதவிகள் காட்டி
'கூட்டிக் கொடுக்கும்
குரு' இடம் தந்தான்.

மூடிய கண்ணே!
இக்கணம் ஆயினும்
விழித்த கண்ணொடு
உழைக்க விழிப்பாய்
ஈர்விழி சேரினே
காட்சிகள் துலங்கும்
இருகரம் கொட்டினே
உரிமைகள் ஒலிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதாவுக்கு..............

ஏங்கோ
ஒரு சுவனத்தில்
ஏவாளின்
குழல் முடிச்சில்
பூத்திருக்க வேண்டிய
வஸந்தம் அவள்;
ஒரு வனராஜனின்
கொல்லையில்
மண்மூடிக் கிடந்தாள்.

காதல்
தேவதைகளை
ஏமாற்றியே விடுகிறது.
வாழ்க்கை
அவர்களைத்
தண்டித்தே விடுகிறது.

வயோதிபத்தில்
அந்த வனராஜன்
நினைவுகளை
வேட்டையாடுகையில்
தன் தடயங்களின்
அடியிற் கிடக்கும்
தன் வஸந்தத்தை
தேர்கையில்....

முதுமை
மனிதர்களை
ஏமாற்றியே விடுகிறது.
மரணம்
அவர்களைத்
தண்டித்தே விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம சுகம்

குத்து விளக் கானதொரு கோலமகள் பூவதன
முத்து நகை பட்டழிந்து போனேன் - ஒரு
கோபுரம் நான் மண்குவியல் ஆனேன் - எனைப்
பித்து என ஊர் சிரித்து பேடியெனவும் பழித்து
மெத்த நகை செய்யும் நிலைக்கானேன் - இந்த
மேதினியில் வேறு சுகம் காணேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்ப்புறமைஸ்

காலமும் கனவும்
பின்னிய வலையில்
காலை விரித்து
நடந்து வந்தேன்.

வாழ்க்கையை உணரும்
வயது வந்ததும்
வசமாய் நானும்
மாட்டிக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவோ, தொடர்ந்து
செல்லவோ இயலாது
இருந்தது திகைத்தேன்
என்னுள் மலைத்தேன்.

உணரவும் கொஞ்சக்
காலம் பிடித்தது
உணர்ந்தேன் இதுதான்
வாழ்க்கை என்று.

பின்னர் என்ன!
நாளையோ வாழ்வின்
பிடித்தமான
கடைசிப் பகுதி.
மரணம் வந்திடும்
மடிவேன் நானும்
செய்தது ஒன்றும்
சீராய் இலைதான்.
என்பதை நோகவும்
இதயம் இல்லை.

போகிறேன் நாளையைத்
தேடிப் போகிறேன்.
புதுவழி என்பதில்
தானோர் புதுமை
என்பிழை என்பதில்
தானோர் இனிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட சேர்க்கைப் பகுதி

மரணத்தை வென்று

ஒரு நாள், ஆதலால், வரவே உள்ளேன்
உண்மையைக் கண்டபின் தாமதம் இல்லை

இதுவரை உன்னைநான் கண்டதும் இல்லை
இதந்தரு சுகமெதும் கொண்டதும் இல்லை
கதைபோல் மானிடர் சொன்னதைக் கேட்டேன்
கவலையை ஓட்டுமோர் சாட்டையுன் கையிலா
ஜதையாய் உள்ளது துன்பமே தனியாய்
ஜாமம் நெருங்குமுன் வருவதற் குள்ளேன்
ஒரு நாள் ஆதலால் யார்அறிந் தாலும்
உன்னிடம் வந்திடும் ஆசையோ டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாப் புறமிருந் தணைப்பவள் நீயே
அழையா விருந்தென அமைவதும் நீயே
முறைநாள் குறித்திடா திணைபவள் நீயே
முதுமையில் தழுவிட விழைபவள் நீயே
நெறியுடன் வாழ்கையில் புணர்வதும் நீயே
நீசனாய் அலைகையில் கலப்பதும் நீயே
ஒருநாள் ஆதலால் வரவுமே உள்ளேன்.
உயிரினைப் பரிசாய்த் தரவுமே உள்ளேன்.

கருவினில் தளிரில் காய்கனி சருகில்
காலமொன் றில்லாக் காதலி நீயே
இருளினில் ஒளியில் இங்கங் கெனாதும்
இமைப்பொழு துண்மையாய் இருப்பவள் நீயே
மரணமே! என்னினி மையுன துளமே
மறுத்திடு லோபியாய் இருந்து நீ இல்லை.
ஒருநாள், ஆதலால், இக்கணம், ஆயினும்
உவந்தே உண்மையாய் வந்திட உள்ளேன்.

உன்குளிர்க் கரத்தால் எனைத்தா லாட்டு
ஊமையுன் மொழியில் உறங்கிடப் பாடு
இவ்வுல கம்ஒரு ஏமாற் றந்தான்
இதன் வலி தீரவோர் கனவினை ஊட்டு
மீண்டுமோர் பிறப்போ சுவனமோ நரகோ
வேண்டிடேன் என்னையுன், கருவினுள் மூடு
மாண்டிடு முன்வரு மரணமே தேடி
மாய்கிறேன், ஆதலால் இக்கணம், எனினும்.

84/9/23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிரங்கம்

நமது இரகசியங்களை
மூடி மறைத்து
இந்தச் சமூகத்தின்
நல்லவர்களாய்
நாம் இருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூர்வமான
நமது ஆசைகளுக்கு
விலங்கிட்டு
அடிமைகளாகி
இந்தச் சமூகத்தின்
சுதந்திர புருஷர்களாய்
நாம் இருந்தோம்.

நாறிப்போன
நமது சமூகத்தின்
கௌரவத்தை மதித்து
நமது தாபங்களை
நாம் கொன்றிருந்தோம்.

நமது இலட்சியங்களை
அவர்கள் இருட்டுக்கு
ஒளியேற்ற
நமது வேகங்களனைத்தையும்
நாம் மறைத்திருந்தோம்.

நம்மை நல்லவர்களாக்கி
அவர்கள்
இருட்டிலேயே
இருந்தார்கள்.

நாமும்
நல்லவர்களென்று
இருட்டில் இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகார்

நம் இருசோடிக் கண்களும்
நாம் சந்திப்பதனை
விரும்பவே இல்லை.

நம்மால் புரிந்துகொள்ள முடியாத
அந்த நாட்களின்,
நாம் புரிந்து கொள்ள மறுத்த
அந்த நாட்களின்,
நினைவின் கசப்பில்,
நம்மை நாமே
அந்நியமாக்கிக் கொண்டதில்
நம் கண்கள் சந்திப்பதனை
நாம் விரும்பவே இல்லை.

நம் மனக்கண்கள்
தாபநீர் வடிப்பினும்
நம் நேர் இதயங்கள்
துடியாய்த் துடிப்பினும்
நாம் விரும்பவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட அறையில் இல்லாத
கருண்ட பூனையின் பீதியில்
நம்மை நாமே
ஏமாற்றிக் கொண்டதனால்
நாம் விரும்பவே இல்லை.

விலகிச் செல்கின்ற பாதைகளில்
நாம் விரைந்தே சென்றாலும்,
விரிந்து செல்லும் மருள் கீற்றில்
நாம் இருண்டே சென்றாலும்
என்றோ,
எங்கோ,
நாம் சேர்ந்தல்லோ இருந்தோம்.

பயணம் முடிந்து
கருணையற்ற மரணம்
தன் குளிர்க்கரத்தால்
நம்மை இறுக அணைக்கையில்,
நம் நினைவில்,
இந்த இடைவெளி
நீடித்திருக்குமானால்,
அன்பே!
நாம் மீண்டும் பிறப்போமா?
நமது வறிய கணங்களை
வாழ்ந்து விட்டுப் போக
நாம் இணைவோமோ?
அல்லது
மீண்டும் மீண்டும்
நம்மை ஏமாற்றிக்கொண்டு
நாம்,
திகைப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொப்பனம்

மீண்டும் இந்த
உலக மடுக்கள்
மீதில் இடற்றி
வீழ்த்து தற்கோ
எழுப்ப வந்தாய்
வேண்டாம் என்னை
எழுப்ப வேண்டாம்,
எழுப்ப வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரிப்பு

தூரம் இருந்தொரு ராகம் - அதன்
தூது கொணர்ந்திடும் தேடிய தாபம்
நாரும் மணம்பெறும் பூவாய் - அவள்
நாணிச் சிவந்திடும் மேனியில் மோகம்
ஊரும் உறவுமோர் பேதம் - மன
ஊடல் முடிகையில் கூடிடும் நேசம்
பேரும் புகழுமே வேண்டின் - இதன்
பின்னுள இன்பம் துறக்கவே நேரும்.

வேதங்க ளோதுவோர் கோடி - பல
வித்தைகள் காட்ட விழைபவர் கோடி
நீதங்கள் செய்பவர் கோடி -மிக
நீளவும் வாழ்வதாய் நம்புவோர் கோடி
வாதம் புரிபவர் கோடி - உள்ள
வாய்ப்பை இழந்து தவிப்பவர் கோடி
சோதியில் சேர்ந்திடும் உண்மை - உள்ள
சொப்பன வாழ்வை மறப்பதே பாவம்.

என்னவோ சொல்லவே எண்ணி - சொல்ல
என்னதான் உள்ளது என்றுமே எண்ணி
கன்னல் மொழியினில் பின்னி -மனக்
காதலைச் சோடனை செய்யவும் முன்னி
மின்னல் பழித்திடும் சோதி - இவள்
மேலுள ஆசையைக் கொல்வதாய் நம்பி
என்னுள் புதைகுழி கொண்டேன் - இனி
என்னதான் சொல்ல எனைமிக மன்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடா வரம்

பின்னர் வருமொரு நாளில் - மிகப்
பிந்திய வாழ்வில் முதுமையின் தோளில்
எண்ணம் பெருஞ்சுமை ஆக - இக
லோக வெறுமை நடைவழி ஆக
தன்னந் தனிமையில் ஊர்ந்தும் - மனத்
தாள லயத்தின் இளமையில் சாய்ந்தும்
உன்னை நான் சந்திக்க நேரின் - உனை
எங்ஙனம் வாழ்த்திட வேண்டுமோ சொல்லு.

வேதனை சொல்லுமோர் உள்ளம் - மிக
வெட்கமும் கெட்டு அலைந்ததோ எண்ணம்
சாதனை செய்ததோ காலம் - இளஞ்
சந்ததி ஒன்றைக் கலைத்ததோ ஞாயம்
காதலைக் கொல்வதோ மூலம் - பகற்
கற்பனை வாழ்வைச் சுகிப்பதோ வேதம்
போதையில் காணுமோர் இன்பம் - ஆதி
பூர்வீக உண்மைத் தரிசனம் ஆகும்.

முன்னுள நாளொன்று தன்னில் - முழு
மோகம் மலர்ந்து மணம் தந்த போதில்
உன்னைக் கடிமணம் செய்ய - எந்தன்
உள்ளம் துடித்த பொருமலே சாட்சி
மண்ணுடன் விண்ணுமென் ஆட்சி - உள்ள
மற்ற சுவர்க்கம் அனைத்துமே வீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் உயிராய்க் கலந்த - அந்தக்
காலத்தை வென்றிடக் கூடுமோ சொல்லு.

நீவரு வாயென எண்ணி - என்னில்
நீண்ட இளமை மடிந்திட வில்லை
வேறு சுகம் பெறவில்லை - ஒரு
வித்துவ மும்உனை வெல்லவும் இல்லை.
தானாய் பழுத்த கனியாய் - நெஞ்சில்
தத்துவம் பாய்ந்த அழகினில் மாய்ந்து
நானாய் எனைவிற்ற தென்ன - எனை
நாடிய காலம் கடந்துமோ வந்தாய்.

நீவரக் கூடவும் இல்லை - என்தன்
நெஞ்சப் பொருமலைக் கேட்கவும் இல்லை.
மாளக் கிடைக்கவும் இல்லை - மன
மையலை மட்டும் மறக்கவும் இல்லை.
தேயும் நிலவாய் வளர்ந்து - வேறு
தேட்டமொன் றில்லாச் சிலையாய்ச் சமைந்து
காய்வதைக் கண்டுமோ வந்தாய் - உன்தன்
கால்பட் டுயிர்வரும் காலம் கடந்தா?

என்றெலா மோஉனை வாழ்த்த - வேறு
எங்கென மோஇனி நான் உனை வாழ்த்த
தொன்று தொட் டுள்ளதிக் காதல் - மிகத்
தூரமாய்ப் போனதைக் கேவியோ வாழ்த்த
வந்ததைப் பாடியோ வாழ்த்த - மனம்
வாடி வரண்டதைக் கூவியோ வாழ்த்த
என்தன் மனதையும் வெல்ல - எனக்(கு)
இத்தனை காலம் பிடித்ததேன் சொல்லு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவி

சூன்யத்தின்
வாசல்களைத்
திறந்து கொண்டு
எதிரும் புதிருமாய்
நாம் புறப்பட்ட போது
ஏதோ ஓர்
இருள் சூழ்ந்த
சந்தியில்
நாம் சந்தித்தோம்.

நாம் அறிந்திராத
ஒரு பலத்த சக்தி
நம் கைகளைக் கோர்க்க
முனைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்
இருளைத் தடவி
நம்மைத் தேடி
ஒருவரை ஒருவர்
நெருங்கி வந்தோம்

நம்மை நாம்
முற்றாய்
அறிந்து கொள்ளாத போதும்
என்றோ,
எந்த உலகிலோ,
நாம்
உறவாய் இருந்ததை
அறிந்து கொண்டோம்.

இந்த உலகின்
மீதிப் பயணத்தை
சேர்ந்து நடக்க
நாம் விரும்பியிருந்தோம்.

அறியாமையும்
புரியாமையும்
அவசரமும்
ஆசையும்
நிராசையும்
நம்மைப் பிரிக்க
மனித சுவர்களை
இடையில் நிறுத்தின.

நம்மில் ஒருவர்
மற்றவரிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகங்கொண்டு
சலிப்படைந்தோம்

நமது நட்பும்
நமது உறவும்
நமது பகையாய்
நமது பிரிவாய்
பயமுறுத்தின.

நம்மை இணைத்த
அந்த சக்தி
நம்மைப் பிரிக்க
நாட்டங் கொண்டது.

நாம்
இதயம் கனக்க
விழிநீர் சொரிந்து
இருளில் தோற்று
பழையபடி
சூன்யத்தின்
வாசல்களைத்தேடி
பயணமானோம்.

நமது வாழ்வில்
சில கணங்களில்
நமது நினைவுகள்
நம்மை வருடலாம்.

அப்போதுகளில்
நாம்,
விதியின் குழந்தைகளாய்
அழவும் செய்யலாம்

10677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கான தீர்ப்பு

சாரளங்களை
மூடி விடுங்கள்
கதவு....
அடைத்தே இருக்கட்டும்,
தோற்றது நானல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியச் சாட்டையின் கீழ்
உரிமைப் புரவிகள்
சுதந்திர மூச்செடுக்க
தருமத் தேரில்
என் எண்ணம்
பறந்தாலும்
என்னைப்
போர்த்தி விடுங்கள்
தோற்றது நானல்ல.

என் மக்கள்
என்னைக் காணநேரின்
உரிமையைப் பறிகொடுத்த
வெற்றியின் அவமானத்தில்
விதிவசமான அவர்கள் தலை
என் தோல்வியின் பிரகாசத்தில்
மழுங்கிக் கவிழ்வதை
நான் பார்க்க வேண்டாம்.
அந்தக் கணம்
நீடிக்கும் வரையில்
என்னை மறந்து விடுங்கள்
தோற்றது நானல்ல.

போங்கள்!
மனித இனத்தின்
சுதந்திர மண்ணைக்
கிளறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை மலர்கள்
விகசிக்க வேண்டும்
துணிவையும்
தியாகத்தையும்
நடுங்கள்
அறிவை
ஊற்றுங்கள்
தூரதிருஷ்டியை
வெளிச்ச மாக்குங்கள்
தொடரப் போகும் வறுமை
உரமாகும்;
வர்க்கக் கூர்மை
காற்றாகும்
சுதந்திரம் மலரும்!

நாள் பட வேண்டாம்.
சுரண்டலின்
எதேச்சாதிகாரத்துக்கு
இவர்கள் அனைவரையும்
பலியிட வேண்டாம்.
இவர்கள் அறியாமைக்கு
இயற்கையைத்
தண்டிக்க விட வேண்டாம்
நாடுகளின் சரித்திரங்களை
நாமே நன்கு அறிவோம்.

போங்கள்!
மரணம்
நம் கையிலில்லை,
வாழ்க்கை
உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டு

பிரகட னிக்காப் போர் - அது
துவந்த யுத்தந் தான்
ரத்தம் சிந்தாப் போர் - அது
இருளின் கருவில் தான்.

இருதய அடிப்பில்
போர்ப்பறை ஆயின
ஊமை யெழுத்தில்
செய்திகள் சென்றன
இடையில் நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாஷைகள்
இருவர்க்கும் ஒரு
பெரும் புதிராயின
பிரத்தி யட்சப் போர் - அது
இருளின் ஜனிப்பில் தான்.

முகத்தின் சுழிப்பும்
நெளிப்பும் மழிப்பும்
மனத்தின் மறுப்பும்
வெறுப்பும் கறுப்பும்
உணர்வின் மோதல்கள் - அது
இருளின் வளர்வில் தான்.

போரை முடிக்க
முனைத்த விடிவோ
புதிராய் இல்லைத்தான் - ஏன்
சரியாய் இல்லைத்தான் - இனி
இருவர் பிரிவில்
வளரும் சரிவில்
இன்பம் இல்லைத்தான் - அது
இருளின் முதிர்வில் தான்.

ஓஹோ! இந்த
உதிரிப் போர்கள்
உதிர்வ தெந்நாளோ - தொலை
நகர்வ தெந்நாளோ - இதில்
உறவைப் புரிந்து
பிரிவைப் பயந்து
கலப்ப தெந்நாளோ - அது
இருளின் அழிவில் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எனும் வேஷதாரிகள்

ஒரு நாளில்
சொல்லி விடுவேன்;
மனம் விட்டு
வாய் திறந்து
அடக்கமான திடத்துடன்
சொல்லி விடுவேன்.

நான் காட்டிய
கோலங்களுள்
நான் மறைத்த
கோலங்களை
வெளியில் சொல்லி விடுவேன்.

நீங்கள் காட்டிய
கோலங்களுள்
நீங்கள் மறைத்த
கோலங்களை
வெளியில் சொல்லி விடுவேன்.

நீங்களும் நானும்
ஆளுக்காள் ஆடிய
நாடகத்தின் வேஷங்களை
தரம் பிரித்து
உடை கலைத்து
வெளியில் சொல்லி விடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நீங்கள்
மன்னிக்காவிடினும்
சரியே.

பொதுவில்
பகிரங்கத்தில்
தனிமையில்
இரகசியத்தில்
எத்தனை நாடகங்கள்
என்னென்ன வேஷங்கள்.

இன்னுமா போதவில்லை.
என்று தான்
ஒன்றாவதாம்.
ஆதலில்,
ஒரு நாளில்
இதழ் பிரித்து
வெளி மலர்த்திச்
சொல்லி விடுவேன்.

உங்கள் கூட்டத்தைப்
பிரிவதாயினும் சரியே.

சரியைப் போல்
பிழைக்கும்,
நன்மையைப் போல்
தீமைக்கும்
நம்பிக்கையைப் போல்
அறிவுக்கும்
கருணையைப் போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைக்கும்
உண்மையைப் போல்
பொய்க்கும்
ஆதியுமில்லை
அந்தமுமில்லை
அதனால்.
மூலமும்
வேஷமும்
ஒன்றாகுமா?

ஊனுக்காய்
உடலுக்காய்
உற்றார், உறாருக்காய்
பெயர், பொருளுக்காய்
பட்டம்,
பதவிக்காய்
புகழுக்காய்
மறைத்ததில் வெற்றி
பொறுத்ததில் லாபம்.

இவைதான்
நானும் நீங்களும்
இவற்றில் தான்
நம்
சுகமும் ரட்சிப்பும்.

உள்ளும் புறமும்
பலதாகி....
இன்னுமா போதவில்லை.

என்றுதான்
ஒன்றாவதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாசறையின் காதலிக்கு

நினைவில் வாழ்பவளே!
பாசறையை வருத்தும்
இந்த நிலவு
உன் நந்தவனத்தில்
வருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களில்
சலித்து
உன் நினைவு
மாயும்.

மனிதர்களின்
சத்துரு
பாரபட்சம் தான்.

ஆதலால்,
நானிங்கு
பாசறையின் பனியில்
தமிழன்னைக்காய்
தவமியற்றுகிறேன்.

இந்தப் பாசறைகளை
நமது குழந்தைகள்
பார்க்க வேண்டாம்.

என் தவத்தை
தோற்க முடியாத
மரணம் முந்தின்
என் அன்பே!
உனது குழந்தைகள்
இந்தப் பாசறைகளில்
காய வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்ம நாபா

மூச்சு விடும்
என் புதைகுழியில்
என் இதயத்துக்கு
நேர் மேலாய்
சுதந்திர விருட்சத்தின்
துடிக்கும் விதையொன்றை
ஆழ நட்டுவிடுங்கள்.

என்,
இதயச் சாற்றை
உறிஞ்சி உறிஞ்சி
இலட்சிய விருட்சம்
வளரும்,
ஏக்கப் பூக்களிலிருந்து
தாபக் காய்கள்
பழுக்கும்;
என்றாயினும்,
என் நம்பிக்கை
காட்சியாகும் வரை
மீண்டும் மீண்டும்
நான் பிறப்பேன்.

என் கல்லறையில்
விதியின் எழுத்துக்களில்
அனைத்து மொழிகளிலும்
பொறித்து விடுங்கள்
''நியாயம் கேட்பாரற்று
இந்த மண்ணுள்
இன்னொரு தமிழன்
விழித்திருக்கிறான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவபூமி

இள இரவின்
வள வஸந்தத்தில்
ஒளி வழியும்
முழு நிலவில்
மனங் கலங்கும் தாபம் தீர
சுகங் குலுங்க
சோபனஞ் சொரிந்து
மிதந்து வா

யுகத்தின் கற்பை
அகத்துள் பொருமி
உனக்காய் விழித்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா, வா.

தனிமைத் தூதின்
இனிமைச் சோகம்
உன் பவன வழியில்
மொட்டு மெத்தை விரிக்கும்.

கனவு உலகின்
இனிய சோலையிடை
நெளிவின் மணிக்கற்களை
சூழ அளைந்தும்
கன்னக் கதுப்புச்
சின்னக் சுழியில்
வீழ்ந்து முகிழ்த்தும்
சாகஸம் ராஹித்துச் செல்கின்ற
உயிர்ப்பு ஓடையில்
நாண ஓடத்தில்
உன் நினைவில்
கட்டுண்டிருக்கிறேன்
வா, வா.

விதியின் முடிச்சை அவிழ்க்கும்
உன் வீணை விரல்கள்
பொறுமை பூத்த மேனியில்
பட்டுப் படர்கையில்
என் பனித்த தாபங்கள்
ஆவியாய்ப் பறக்கும்
இனித்த நினைவுகள்
கனவுபோல் நனவாகும்.
என்னை, வா வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நினைவை
கெல்லி அழித்து
உள்ளாகு.
நீயும் நானும்
நானும், நீயுமே
உலகம் நம் ஒளியில்
இருளும்.

ஓடப்பாயை
உதறி விரி.
உள்ளும் புறமும்
சுருண்டும் விரிந்தும்
நீயே.

உட்கார்
எவ்வளவு காலம்!
எத்தனை யுகங்கள்!

மடியிற் சாய்.
ரகஸ்ய ஆழியின்
முத்தைச் சிலிர்க்கும்
பிறப்புத் துடுப்பை விடு.
அண்டம் சுருங்க
ஓடம் வெல்லும்.

வா, வா!

மரணக் கம்பத்தின் பாசக்கயிற்றை
பயருவதோ?
வாராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்த ரஹஸ்யம்

தாழக் கிடந்ததோர் வீணை
அதன்
தந்தியில் மௌனமாய்
ராஹம் இசைக்குதே!
ஆழக் கடலோ மனது;
அங்கு,
யாரும் அறிந்திடா
ஆசை ரகசியம்
சூழக் கிடக்குமோர் ஆன்மா:
இதன்,
துன்பம் நினைக்கையில்
பொல்லாத கோபமே.

வேலியை யாரோ விரித்தார்!
இந்த,
வேதனைப் பாதையை
யாரோ விதித்தார்!
போலியாய் வாழ்வதே வாழ்வோ?
இதில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் உண்டெனச்
சொல்வதோ தர்மம்?
வாலிலாச் ஜன்மமாய் ஆனோம்:
அந்த,
வாழ்வை நினைக்கையில்
உள்ளம் பொருமுதே.

மெல்லத் திறந்திடு தாளை.
இந்த
மேனியின் ஆசையைக்
கொன்றிடக் கூடு.
சொல்லித் தெரியாக் கலையே.
இதன்,
சோகமே வாழ்வை
அனர்த்தமாய் ஆக்கிடும்
'நல்லதே, ஆயினும் தூரம்'
என,
நம்பினால் இன்பமே!
துன்பமே எஞ்சும்.

பாடலை யாருமே கேளார்.
இதன்,
பண்ணிசை மூடரின்
காதினைச் சேரா.
கூடலை யாருமே தேரார்.
உடன்,
கூடியே ஆசையைக்
கொன்றிடக் கூடார்
வாடியே வாழ்வில் மடிந்து
இந்த,
வாழ்வின் பொருளை
இழக்கவோ சொல்வார்.

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனை

நீலநதி வானத்தில் நீந்துகிற ஓர்பறவைக்
கோலமருள் ஞானரதக் கூத்தா - மனக்
கோடியிலே மூடியுள்ள வேதனையைக் கூவுதற்குக்
கொஞ்சுகுரல் தந்தருளு கூத்தா.

காலமெலாம் காதலிலே கண்ணுறக்கம் நீத்தவளின்
காதலினைப் பாடுதற்குக் கூத்தா - உள்ள
காவியங்கள் அத்தனையும் மேவுதற்கு ஓர் கவிதை
கண்டுவிடக் காட்டிவிடு கூத்தா.

ஞாலமொரு நாடகமே; நானுமதில் பாத்திரமே;
நல்லடியான் ஆடிவிடக் கூத்தா - மனக்
கோலமுடல் கோலமெனக் கோலமில்லா நல்லடியார்க்
கோலமருள் ஞானரதக் கூத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி

நான்,
தரையில் நடக்க
கால் கொண்ட மனிதனாய்ப்
பிறந்து வந்தேன்
பின்னர்,
நீரைக் கடக்க
கை கொண்ட மனிதனாய்
இருக்கக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்,
மண்ணில் ஊர
வயிறு கொண்ட மனிதனாய்ப்
பிறந்து வந்தேன்
பின்னர்
விண்ணில் உலவ
அறிவு கொண்ட மனிதனாய்
இருக்கக் கண்டேன்

இனி,
ஒளியில் கலக்க
அருள்கேட்ட மனிதனாய்ப்
பணிந்து நின்றேன்
பர,
வெளியில் கலக்க
வரம் கேட்ட மனிதனாய்
வணங்கி நின்றேன்.

இறைவா
ஞானப் பரஞ்சோதியே!
என்னை
இருளை அறுத்த மனிதனாய்
வாழச் செய்.
உன்னில்,
உயிரை அழித்த மனிதனாய்
உயர்ந்து நிற்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநிர்ணயம்

வஸந்தத் தேவதையிடம்
வரம்பெற்ற வருகையில்
அழுகுரல் கேட்டது
கீழே,
மடமைச் சகதியுள்
மனிதன் தவித்தான்.

ஹே, மானுடா
என்ன உன் துன்பம்
கூறு; கூறு என்றேன்

பறக்கும் கரங்களை
சகதியுள் கால்கள்
தடுப்பதைப் பார்
என்னை,
விடுவி, விடுவி''

மூட மானுடா
நீ உன் கால்களை
நிலத்தில் நிலைத்ததும்
ஏனோ?
முதலில்
நீ உன்னை
விடுவி,
விடுவி

இன்னும் இன்னும்
அழுகுரல் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபப் பிரசாதம்

காவியச் சோலையிலே - உள்ள
கற்பகம் கீழ்பல காலங்களாக நான்
ஓவிய மாயிருந்தேன் - உனை
எண்ணிப் பல தவம் செய்துவந் தேன்.

ஞாலத் தமைதியிடை - ஒரு
நள்ளிர விற் சுடர் தாரகை அன்ன நீ
மோனத் திரு வெடுத்து - என்
முன்னாகி நிஷ்டை முறிய வைத்து, உடன்
''கேளுன் வரத்தை'' என்றாய் - மனம்
கேவி அழுதிட நொந்துவிட்டேன்.

கேள்வி மறந்து விட்டேன்!? - ஏதும்
'கேட்டுப் பெறவோ' இருந்து விட்டேன்? - பல
காலம் அழியவிட்டேன் - யுகம்
பண்ணிய நற் தவம் கொன்றுவிட்டேன் - இனி
யாது நான் செய்திடு வேன் - எனை
ஆண்டிடும் தேவதை யாரெனக் காணுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து

நீ ஆட்டும் நாடகத்தில்
நான் ஆடும் வேடத்தில்
என்னை நடிக்க வைத்தாய்.

என்னைவிடப் பொருத்தம்
இல்லாமல் போனாயோ!

என்னில் எது கண்டு
என்னை நியமித்தாய்!

என்னை எது வரைக்கும்
இங்ஙனமாய் ஆட்டிவைப்பாய்!

நான் விழையும் வேடத்தை
என்றெனக்கு நீ கொடுப்பாய்!

நீ ஆட்டும் நாடகத்தை
நான் பறித்து நான் ஆட்டி
உன்னை நடிக்க விட்டு
உன்னை உணர்த்து விக்கும்
வேடம் தான் என் விருப்பம்
வேறு விருப்பமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டுவதும் நீயாகி
ஆடுவதும் நீயென்றால்
நானேன் இடைபுகுந்தேன்?
நானேன் தனித்து விட்டேன்.

உன்னோடே ஒன்றாகி
உன்னைப் பிரியாது
ஆட்டிடவும் ஆடிடவும்
ஆசை எனக்குண்டு.

சம்மதமா சொல்லு
சரியென்றால் கூட்டுக்குச்
சேர்ந்தொழுங்காய் செய்வோம்.

'சேர்ப்பதற்கும் இஷ்டமில்லை'
என்றால் எனக்கு
என்ன வழி பண்ணிவைத்து
உள்ளாய் அதைச் சொல்லு.

உண்மையில் நான் நல்லாய்
ஆடிக் களைத்து விட்டேன்
ஆடும் கால் சோர்ந்ததுவே.

இந்நிலையில் என்னை
இனி ஆடச் சொல்லாதே
இவ்வேடத்தோடே
இனி ஆட வைக்காதே.

வேடத்தை மாற்றி
வேறெதுவும் வேலையில்லா
வேடமொன்று தா போதும்
வேறொன்றும் வேண்டேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமம்

ஒவ்வொரு நாளும்
உன்னிலே மடியும்
ஒவ்வொரு நாளுமே
உன்னிலே விடியும்

விடிவும் மடிவும்
என்னிலொன்றாயின.
நீ எனில் ஒன்றாய்
நீடித்திருப்பதால்.

நீ இலா வாழ்வை
இரசித்து மாய்கிறேன்
நீ இலா வாழ்வை
வெறுத்து வாழ்கிறேன்

10677

விழிப்பும் நீயே
உறக்கமும் நீயே
விரதமும் நீயே
விருந்தும் நீயே.

என்னின் முன்னாகு
என்கலி தீரு
என்னையுன் போர்வையுள்
இறுக்கமாய் மூடு!

நீயிலா நானொரு
மாயையே; கனவே!
நீ இருந்திடினோ
நானொளிப் பிளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழாரம்

வழியை விடு
இனி ஏமாறமாட்டேன்.

எனது நொண்டிப் படைப்புகளுக்கு
நீ சார்த்திய புகழாரங்கள்
கருகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏமாறமாட்டேன்.
என்னை விடு.

எல்லாம் அறிந்தவனாய்
நானும்,
என்னை அறிந்தவனாய்
நீயும்,
போட்ட கூத்தெல்லாம்
போதும்,
ஆளை ஆள்
நன்றாய் ஏமாற்றிக் கொண்டோம்
போதும் விடு.
என்னை விடு.

முதுமையின் தனிமைக்கு
உனது புக்ழாரங்கள்
துணையாகவில்லை.

என் படைப்புகளுக்கு
நான் விசுவாசமாய் இருந்ததில்
எனக்கு வழி
கிடைத்துவிட்டது.

உனது பாராட்டுதல்களில்
விசுவாசம் இருந்ததா?

உனது இயலாமையை
மறைத்துக் கொள்வதற்கு
வேறு ஆளைப்பார்.
இனி ஏமாற மாட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகம்

அன்று
தொட்டிலில்
அவள்
தாலாட்டின்
அர்த்தம் புரியாமல்
நான் மயங்கினேனா?

இன்று
இவள் எனும்
அர்த்தம் புரியாத
காதலில்
நான் மயங்குவதற்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி

காலச் சக்கரத்தின்
அடியில் நசுங்கி
நான்
முடமாய் எழுந்தேன்

இன்னும்
என் பாதை
வானத்தின் அடியில்
முட்டிநின்றது.

என் முடத்தோடு
நான்
நடந்தே ஆவேன்.

துயரம்

நீ
என்னைப்
பிரிந்திருந்த போது
என்னில் எதனையோ
நான்
தொலைத்து வந்தேன்

பின்னர்
ஒருநாள்
நீ சேர வந்த போது
தொலைத்ததை
மீளப் பெறாமலேயே
நான்
சேர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி ஆசை

காணி நிலம்
வேண்டாம்.
ஒரு
கட்டிடமோ
தளபாடமோ
வேண்டாம்
கூடவே
பூங்கா வேண்டாம்
இன்னும்
கொள்ளை கொள்ளையாய்
பணமுமே
வேண்டாம்
நாவினிக்கப்
பண்டம்
ஒரு
நாளினில் ஆயினும்
தந்திட
வேண்டாம்
மாடாய்
உழைத்திடுவேன்
மன
நிம்மதியோடு
உறங்கிட
ஆறடி.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து

பனியெனத்
தூர்ந்து
மலரெனப்
பாவி
பரிமளிக்கின்ற
உன் பெண்மை
தனிலுளம்
ஊர்ந்து
கனவினில்
வாழ்ந்து
தவித்திடும்
நாளிலோர்
நாளில்,
கனி இதழ்
மோந்து
காதலைச்
சொல்ல
கனிவுடன்
எனை அழைத்தால் நீ,
இனி மனம்
சோர்ந்து
இருந்திடுவேனோ
இன்பமே
இளமையே
சொல்லு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்மத்தம்

மனந்தன்னைக் குவித்து ஒரு
மாதவத்தைச் செய்வான் போல்
மலைத்து நின்றேன்
மதியாது எதை நினைத்தோ
எனைப் பார்த்து மனமிரங்க
மறுத்தாய் நீயும்.
சினவாது உன்னிதயக்
கதவுகளின் தாழ்ப்பாள்கள்
திறக்கும் ஓர் நாள்,
சீராக நம் காதல்
செய்திகளைச் சொல்லிடுவோம்
என்றிருந்தேன்,
கனவாகப் பொழுதெல்லாம்
கால்களுக்கு மரப்பு தனைத்
தந்து போக
காத்திருந்த அக்காலம்
வந்தது நான் என்னுள்ளாய்
கசிந்து போனேன்.

உனது இள நல்லதரம்
உதிர்ந்துவிடும் மெய்க்காதல்
உவமை கேட்க
உதிரத்தை ஓடாது
நிறுத்தி விட்டு உன்னொலியைக்
காத்திருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘எனக்கென்ன பைத்தியமா?
என்றதனைக் கேட்டாய் நீ
என்ன சொல்வேன்,
என்பட்டை உறைந்திற்று
என் வயிறும் எரிந்திற்று
இருந்தும் சொன்னேன்.
‘உன்மத்தம்’ கடவுளுக்கும்
உண்டென்றார் இவர் பேரில்
உள்ள அன்பை
உனக்கெந்தன் காதலுமவ்
உண்மையினை விளக்கிற்றா
நன்று நன்று!

வடுவெடுத்த மேலதர
மேனியளே வாய்க்குருசி
வசையில் இல்லை.
வாழ்வதொரு நாழிகைதான்
அதற்குள் என் காதலை நீ
அறியா விட்டால்,
மடுவெடுத்து உள்ளாக
எனை அடைப்பர் அங்கு வந்துன்
மலட்டுக் காதை
மண்ணில் வைத்து உற்றுக்கேள்
அதுபாடும் அழியா என்
காதல் கீதம்.
எடுப்பொன்றை பெரிதாக
எண்ணியெனை இவ்வுலகில்
இகழ்ந்தாய் நீயும்,
என் நெஞ்சில் வாழ்ந்திடுமுன்
இள நினைவு என்றைக்கும்
இறந்து போகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை

உரிமைப் போரில் வழியும் குருதி
ஓயவோ சற்றும் உலரவோ இல்லை
உயிருக் கலையும் ஓநாய் கூட்டமும்
ஒழியவோ இன்னும் உறங்கவோ இல்லை.

வழியில் மந்தமும் விழியில் துயிலும்
வரமென நம்பியே நீயும் வாழ்கிறாய்
பழகிய வெறியில் திசையினைத் திருப்பி
பாயுமே ஓர்நாள் ஓநாய் உன்னிலும்

மறைபொருள் அறியா மார்க்கம் செய்து
மனிதனை மதியா மதமெதைக் கொண்டாய்!
பிறைகள் பார்க்கிறாய் பெருநாள் கொள்கிறாய்
பெரும்பணி இருந்தும் பேதையாய் வாழ்கிறாய்.

அயலவன் இன்றுதன் அடிமைத் தளைகளை
அறுத்தே எறிந்திட , சரிசமம் ஆகிட்
புயலெனப் பாய்ந்தான், பொறுமையைப் பூண்டே
புத்துலகத்தினை வரித்திட மாய்ந்தான்.

உன்தன் கால்களில் உன்தன் கைகளில்
உன்தன் வாழ்வினில் உரிமை யாவிலும்
பொன்னால் விலங்கெனும் போதையில் வீழ்ந்து
பொறுக்கியாய் வாழ்வதில் பெருமிதம் கொண்டாய்.

தோழனே நீயொரு மனிதனென்றுணர்வாய்
துடித்தெழு நீ ஒரு அடிமையே அல்ல.
ஏழையாய் வாழினும் கோழையாய் வாழ்வதோ
எதிர்த்திடு தீமையை இகம் ஒரு கணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிவாதங்கள்

கணக்கைக் கொடுத்தார்
செய்து பார்த்தேன்
கிடைத்த விடையில்
திருப்தி இல்லை.

வழிகளை, முறைகளை
மீட்டிப் பார்த்தேன்
அனைத்துமே சரியாய்
தெரிந்தன: ஆயினும் -

விடையில் எனக்குத்
திருப்தி இல்லை
வேறோர் விடைதான்
திருப்தி அளிக்கும்

ஆதலால் மீண்டும்
செய்து பார்த்தேன்
அந்த விடைதான்
கிடைத்தது மீண்டும்

மீண்டும் செய்தேன்
தொடர்ந்தும் செய்தேன்
வேறோர் விடைக்காய்
பிரார்த்தனை செய்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் பழைய
விடையே கிடைத்தது
அதனை விடுத்து
விடை வேறில்லை.

முறைகளை மாற்றி
வழிகளை மாற்றி
தாளை மாற்றி
பேனையை மாற்றி

இடத்தை மாற்றி
பொழுதை மாற்றி
இருந்தும் எழுந்தும்
நடந்தும் படுத்தும்
செய்து பார்த்தேன்
பலிக்கவேயில்லை
இந்த விடைதான்
திரும்பவும் கிடைத்தது
இந்த விடையில்
திருப்தியே இல்லை
இதுதான் விடையெனில்
விரும்பவும் மாட்டேன்.

எல்லாவற்றையும்
மாற்றிப் பார்த்தேன்
எல்லாரிடமும்
கேட்டுப் பார்த்தேன்
அனைவரும் இதுவே
விடையெனச் சொன்னார்
ஆனால் எனக்கதில்
திருப்தியேயில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் திருப்தி
தருமவ் விடையை
எங்கெல்லாமோ
தேடித் திரிந்தேன்.

தெருவில் சென்ற
பைத்தியம் ஒன்று
கணக்கை மாற்றச்
சொல்லிச் சென்றது.

ஆஹா! அற்புதம்!
அதுதான் இனிவழி!
கணக்கை மாற்றிப்
பார்ப்பதன் மூலமே
எனக்குத் திருப்தி
தரும் விடை வரலாம்

திருப்தியைத் தந்திடும்
விடையை வைத்து
பின்னால் நோக்கிப்
படிகளை எழுதி
கணக்கை மாற்றினேன்
திருப்தி வந்தது.

கணக்கில் தானே
தவறு இருந்தது
என் தன் விடையில்
தவறே இல்லை.
இதுவே தான் நான்
நாமே தான் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி

பாம்பு பூச்சிகள்
இருக்கும்:
இந்தப்பாதை
செல்ல நேர்ந்தால்.
பாம்பு பூச்சிகள்
இருக்கும் என்பதால்
இந்தப்
பாதை செல்ல
நேராமல் விடுவதோ

சுகம்

தனிமையின்
குளிர்வாடை
என்னை
ஆரத் தழுவிய போது
உன்னைத் தேடினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி வருடங்களுக்கு
அப்பால் நின்று
நீ
கண்சிமிட்டினாய்.

நானோ
உன் நினைவைப்
போர்த்திக் கொண்டு
உறங்குகிறேன்.

போராட்டம்

இன்னும்
பல பகல்களில்
நாம்
குருதி வியர்வை
சிந்தலாம்.

இன்னும்
பல இரவுகளை
நாம்
மரண மூச்சில்
கழிக்கலாம்.

ஆயினும்
நம்பிக்கையோடிரு!
நமது சுதந்திரத்தை
எழுதும் வரை,
நமது இரத்தம்
உறைந்து விடாது -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம்

நான் ஓடிவந்த பாதை
ஒரு மூடன் சொன்ன காதை
நான் உலவி வந்த பூங்கா
ஒரு மலரில்லாத மாலை

நான் பாடி வந்த ராஹம்
என் பாவம் செய்த சோகம்
நான் பழகிய வந்த கானம்
என் தனிமை போடும் ஓலம்

நான் தேடி வந்த செல்வம்
ஒரு தெய்வ நிந்தையாமோ
நான் தேர்ந்து வந்த பாடம்
மிகத் தூரமுள்ள ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநாள் வாழ்த்து

அகதிகளான
நமது சமூகமும்,
அடிமைகளான
நமது தலைமையும்,
இலக்கைத் தொலைத்த
இளைஞர் கூட்டமும்
இகத்தின் சுகத்தை
விரும்பும் மக்களும்,
எம்மைச் சூழ்ந்த
அறியாமைகளும்
எதற்கும் நடுங்கும்
எமது பயங்களும்
நம்மோடிருக்கும்
நாட்கள் வரைக்கும்
நமக்கும் தியாகப்
பெருநாள் உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிஹாத்

உண்மை சொன்னதற்காய்
பிர்ஔன்
என்னை சிறையிலிடட்டும்.
பதவிக்காய் காட்டிக் கொடுக்கும்
சாமிரி நானல்ல.

என் தொடர்புகளைத் துண்டித்து
அதிகார வெறியில்
அவன் என்னை
நாடு கடத்தட்டும்.
சலுகைகளுக்காய்
சமூகத்தை ஏலம் போடும்
சந்தர்ப்பவாதி நானல்ல.

என் ஒட்டகத்தைப் பறித்து
பாலைவனத்தின்
சுடு மணலூடாய்
அவன் என்னை
நடக்க வைக்கட்டும்.
சுய லாபத்துக்காய்
சுதந்திரத்தைப் பறிகொடுக்கும்
பதர் நானல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானோ,
என் மக்களின் விடுதலைக்காய்
'தூர்' மலை முகட்டில்
தெய்வ நீதி வேண்டித்
தியானம் புரிகிறேன்.

நான் திரும்பும் போது
மூஸாவின் ஆஸாக்கோலில்
பேனை செய்து வருவேன்.

நம்பிக்கை வற்றிய
என்னவர்கள் நரம்புகளில்
சுதந்திர கீதம் மீட்டுவேன்.
அவர்கள்
அறியாமையிலும்
அடிமைத்தனத்திலும்
ஆட்சி செய்யும்
பிர்ஔனின் சந்ததிகளை
சந்தியில் நிறுத்துவேன்.

என் சுசுதந்திர நைலை
திசை திருப்பி ஓடச்செய்ய
பிர்ஔனின் பேடித்தனத்துக்கு
வல்லமை கிடையாது.

அவன் இரவல் அதிகாரங்கள்
என் சத்தியத்தேரின்
சக்கரங்களின் கீழ்
நசுங்கி அழியும்.
அவன் போலிக் கௌரவத்தில்
நான் ஒளிக்கல் மழை
பொழிவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எளிய சதிகள்
ஆதமை வெளியேற்றிய
பாம்பாக நுழைந்தாலும்
மூஸாவின் ஆஸாவால்
அதனை விழுங்கி அழிப்பேன்.

அவன் குடும்பலாப
சமுத்திரத்தை
செங்கடலாய் மாற்றுவேன்.

பிர்ஔனின் சிலை தொழும்
சாம்ராஜ்யத்துக்கு
அல்லாஹ்வைத் தொழும் சிரசு
அடி பணிந்து விடாது.

பிர்ஔனின் பதவி ஆசைக்
கடலைப் பிளந்து
என் சமூகத்தை
விடுதலை செய்வேன்.

சத்தியத்தை அழிக்க
பிர்ஔனின் சந்ததிகள்
கை ஓங்கும் போது,
தர்மத் தேரில்
போர்க்கோலம் பூண்டு
மூஸாவின் சந்ததிகள்
வெளியே வருவார்கள்.
சத்தியம் வெல்லும்!
நிச்சயமாக
அசத்தியம் அழியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபமில்லா மாளிகை

கும்மிருட்டு
பின்னிரவு
எண்ணமெலாம்
உன் உருவம்
என்ன செய்யச்
சொல்லுகிறாய்
என் தனிமை
ஏனறியாய்.

10677

கண்ணழகும்
பின்னழகும்
காலழகும்
மேலழகும்
என்னை நிதம்
கொல்லுகையில்
என்ன செய்யச்
சொல்லுகிறாய்.

வண்ண மலர்
வாடிவிடும்
வான் நிலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்ந்துவிடும்
உன் நினைவுச்
சாகரத்தின்
ஓர் அலையும்
ஓய்வதுண்டோ!

காதலொரு
சோதனை தான்
காமம் ஒரு
வேதனை தான்
சாதலெனும்
மாமருந்தோ
சாந்தியினைத்
தந்துவிடும்!

ஆதலினால்
ஆரணங்கே!
ஆசைதனைக்
கொல்வதற்கு
மாதவங்கள்
செய்ய என்னை
மாற்றிடு உன்
போதனையால்.

நீ உலவா
நந்தவனம்!
நீ ஆடா
என் அரங்கம்;
தீபமில்லா
மாளிகையே
தெய்வமில்லா
கோயிலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைலா.... லைலா.....

காரிருள் வானமாய்க் கண்களும் - பழக்
கன்னக் கதுப்பில் குமிழும் நகைகளும்
நீரருவிக்கருங் கூந்தலும் - இள
நெஞ்சைத் துளைத்துத் துருவுமப் பார்வையும்
வீரியம் சொல்லும் பருவமும் - பல
வித்தைகள் காண விளைந்த பொன் மேனியும்
நாரி இவள் படை கொண்டதோ - மன
நாடி துடித்திடும் வேகம் அறிவளோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் செய் மாதவம் கூடியோ - இவள்
மோனத் தரிசனம் வாழ்வினில் கிட்டுதல்
கன்னல் வழி மொழிக் கிள்ளையோ - இவள்
காதல் ரகசியப் பேரின்ப எல்லையோ
பின்னல் சடையொரு தொட்டிலோ - இதன்
பின்னாடும் ஆசையின் எண்ணமோர் மட்டிலோ
என்னை வருத்திடும் இன்பமே - இவள்
இன்னுறவில்லையேல் உள்ளது துன்பமே.

லைலா! எனதுயிர் உன்னிடம் - தனி
லட்சியம் உன்னெழில் தஞ்சம் அடைகுதல்
கைலை உனதடி மோட்சமோ - உன்
காலிடை வீழுமோர் மாமணி மண்டபம்
வெயிலைப் பழித்த உன் புன்னகை - எனில்
வீசிடில் ஜன்மசாபல்யமே - மஜ்னுவின்
குயிலது கூவுதல் கேட்டதோ - எனில்
கூடிடும் தூதினைத் தாமதிக்கின்றதேன்.

வாழ்வின் அனர்த்தம் அறிவையோ - அது
வந்தது போலவே போகவும் செய்யுமே
நாளைக் கடத்துதல் லாபமோ - நமை
நாமறியாமலே வாழ்வதும் ஆகுமோ.
வேளை தவறவே விட்டிடின் - வரும்
வேதனை தாங்கிடச் சக்தியும் உள்ளதோ
காளைப் பருவமென் கன்னியே - இது
கண்களை மூடித் திறக்கையில் மாறுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிக்குமரனுக்கோர் அஞ்சலி

ஆழிக்குமரா
ஆனந்தா!
அன்னைத் தமிழின்
செல்வப் புதல்வா!

அழியாப் புகழின்
இமயத்தில்
சாகஸத் தவங்கள்
செய்தாயே.

கடல்களைப் பிளந்த
உன் கரங்கள்
இன்று விறைத்தனவா?
களைக்காது ஆடிய
உன் கால்கள்
இன்று மரத்தனவா?

இலட்சியப் பூங்காவில்
புகழ் மலர்கள் பூத்த
உன் ஓர்மம்
காலச் சூழலில்
மூழ்கிப் போனதா?

ஆனந்தா!
மனித நெஞ்சங்களை
'கின்னஸ்' ஏடாக்கி
மறைந்தாயா?
எமக்காய் அழும்
எம் நெஞ்சக்கடலை
நீந்திக்கடக்க
நீ வாராயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பனே
அதிசயமானவனே
ஆயிரமாயிரம்
ஆங்கிலக் கால்வாய்
உனக்கு அற்பம்

ஆதலில்
காலக் கடலை
நீந்திக் கடக்க
காலனே உன்னைக்
கவர்ந்து சென்றானோ!

உலகம்
ஒரு பெருமையை
இழந்தது:
தமிழன்னை
ஒரு தவத்தை
முடித்தாள்.

ஆழியில்
உன்புகழ்
ஊழ்வினை
முடியவோ
'ஆழிக்குமரன்'
எனும் பெயர்
சூட்டினர்.

இதோர் பார்
'கின்னஸ்'ஏடு
இன்னும்
திறந்தே கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காய் ஒதுக்கிய
ஓராயிரம் பக்கங்கள்
விரியத் திறந்தும்
வெறிதும் கிடக்கும்

இன்னுமோர்
குமரன் எம்மில் உண்டோ?
சொல்!

ஆதலின்
எழும்பு, எழும்பு

ஆங்கிலக் கால்வாயை
அள்ளிக் குடித்து
காலன் கவர்ந்த
உயிரையும் மீட்டு
மரணத்தை வென்று
எழும்பு

சோம்பித் தூர்ந்து எம்
உள்ளம் சிலிர்க்க
துடிக்கும் விடுதலைத்
தீபம் ஏந்தி
துள்ளிக் குதித்து
எழும்பு.

இன்னுமொரு
பக்கமென்ன
'கின்னஸ்' ஏடு
முற்றாயுமே
அழியா உன் புகழை
முழுதாய் நிரப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களெழுச்சி

சலங்கை ஒலித்த
அன்னையின் கால்களை
விலங்கு வளைத்ததைக்
கண்டு,
கலங்கி நின்றான்
ஒரு மைந்தன்.
கண்ணீர் வடித்தான்
மறு மைந்தன்
காரணம் தேடினான்
இன்னொருவன்
'கடவுளால்' என்றான்
பிறிதொருவன்.

தன்னலம் பேணி
தாயினை விலங்கில்
தவித்திட விடுத்தான்
மற்றொருவன்

அடுத்தவன்
இருளில்
அன்னையின்ஆடையை
திருடிக் கொடுக்கவும்
திடசித்தமானான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்னையே விலங்கை
அறுத்தெறிந் தெழும்பு'
ஆவேசம் பாடினான்
வேறொருவன்.

அடுத்தவர் கருத்தை
அறிந்திடத் தேசம்
சுற்றியே வந்தான்
சோம்பேறி மைந்தன்.

பிஞ்சு நகத்தால்
முரசுப் பல்லால்
பிய்த்து இழுத்தான்
நடு மைந்தன்,

காலே உடையினும்
விலங்கினைக் கழற்ற
கடுவழி நடந்தான்
வீர மைந்தன்,

அன்னையின் தளையில்
தன்னையே உணர்ந்து
ஆர்த்து எழுந்தான்
கடைசி மகன்

''அவனை
விட்டு விடுங்கள்.
அவன் பணி
தொடரட்டும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூறின் மாதங்கள்

நீயும்
நானும்
தமிழர்கள் தான்.

அந்த
ஆழ்ந்த நம்பிக்கையில்
உறங்கிக் கொண்டிருந்த
வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை
ஒரேயடியாய்
திடுக்கிட்டெழச் செய்தது யார்?

பின்னர்
நான்
தூங்கப் பயந்தேன்.

எனது நம்பிக்கையை
இன்னொரு தடவை
சோதிக்க விட
நான் தயங்கினேன்.

யாரின்
கெடுபிடிகள்
எனது தமிழை
என்னிடமிருந்து
பிரிக்கப் பார்க்கின்றன?

யாரை
நான்
பயருகிறேன்?

இன்னொரு தடவை
நான்
தமிழ்க்கவியின் தாலாட்டில்
நம்பிக்கைத் தொட்டிலில்
தூங்கத் தயங்குகிறேன்.

என்னை
வெருளச் செய்தது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயடியாய்ப்
பிரிந்துவிட
நான்
மறுக்கிறேன்.

நான் புணர்ந்த போது
தமிழ் பெற்ற இன்பம் பற்றி
தமிழிடமே
கேட்டுப்பார்!

என்னைத்
தமிழிலிருந்து பிரித்து
தமிழையும்
தண்டித்து விட
யார்
போர் முரசு கொட்டினார்.

சொல்;
நீயில்லை தானே?

எனது அறியாமைக்கு
இத்தனை பெரிய
தண்டனையா?
எனது பலஹீனத்துக்கு
இவ்வளவு பெரிய
படையெடுப்பா?

நான்
சமாதானத்தையே
நேசித்தேன்,
கௌரவமான
சமாதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ
ஓர் மூலையில்
எனக்கும்
வீர வரலாறு
உண்டு.

உனக்கு
யாரோ செய்ததென்று
எனக்கு
நீ செய்யலாமா?

சொல்!
அவனும்
நானும்
ஒன்றா?

ஆனால்,
நீ ஏன்
என்னளவில்
அவனாகப் பார்க்கிறாய்?

ஏன்?
நீயும்
அவனும்
ஒன்றா?

இல்லையே
இல்லவே இல்லையே!
இருக்கவும் கூடாதே!
நீ
இருக்கிறாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்!
நான் யார்?

இந்த மண்ணை
உவந்த
உயர்ச்சியில்
தாய் நாடென்றோமே!
தமிழ் மொழி
மாநிலம் என்றோமே!

சன்னமான
எனது குரலிலான
மிருதுவான
எனது மொழியை
நீ
கண்டுகொண்டதே இல்லையா?

என்னை
ஏன்
ஹிம்சித்தாய்?

காதலைப்
பாடிய தமிழில்
வசை பாட
வைக்கப் பார்க்கிறாயா?
போதும் -
வேண்டாம்!
அதிகமாய்ச்
சோதிக்காதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷத்திரிய யாத்திரை

அந்த
உல்லாசப் பயணத்தை
எனக்கு
நினைவூட்டாதே.
நான்
எனக்குள்
இன்னும்
கவிஞ்ஞன்தான்.

தமிழைப்
புணர்ந்து
சரசம் விளையாடிய
அந்த
வசந்த காலத்தின்
காதல் கவிதைகள்
என்
ஜன்ம சொந்தங்கள்:
என் பெயர் சொல்லும்
சந்தங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த
சுயநலத்திற்கு
என்னை
இனி
மீட்டிவிடாதே.
அந்த ராகத்தில்
என்னை
வாட்டிவிடாதே.

நான்
நம் சமூகங்களுக்காய்
தேசாந்தரம் செல்லும்
ஷத்திரிய
யாத்திரிகன்:

இந்தக்
கோலத்திற்குள்
குயிலுக்கும்
மயிலுக்கும்
கூடாரம்
கிடையாது.
கொண்டாட்டமும்
இல்லை.

நினைத்துப் பார்!

கர்ச்சிப்புகளும்
உறுமல்களும்
ஊளைகளும்
கலந்துரையாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த
சாகச
சதுரங்கத்தில்
ஒளித்து
விளையாடுவதை
நினைக்கவும்
முடியாது.

விழித்துப்
போராடும்
தருமத்
தீக்குளிப்பு இது.

இந்த
அரச
அசுர கலையில்
ஒரு
ஆத்மீகக் கவிஞனை
பறி கொடுத்தாய்
சலித்துவிடாதே.

இந்த
உலகத்தை
கவிஞர்கள் உலகமாய்
மாற்ற
கனவு கண்டு
செல்கிறேன்.

10677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு மரணம்

என்னுறக்கம் போயாச்சு -
ஏதுஞ் சொல்லித் தாலாட்டு
நானுறங்கி நாளாச்சு
என்னைத் தொட்டுத் தாலாட்டு.

சொந்தமென்று உள்ளதெல்லாம்
தூக்கமில்லா ராத்திரியே
பந்தமென்று வந்ததுவோ
நெஞ்சு நொந்த காவியமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையில் தாலாட்டு
கண்ணுறங்கத் தாலாட்டு
இப்பிறவி மாயுமட்டும்
ஏதுஞ் சொல்லித் தாலாட்டு.

யார் வனைந்த பாத்திரமோ
யார் வரைந்த கோலமிதோ
நான் கேட்டு வந்ததுவோ
என்னைப் பலியாக்குவதோ.

என்னைக் கொஞ்சம் தாலாட்டு
நானுறங்க வேண்டுமிப்போ
என்னைத் தொட்டுத் தாலாட்டு
நானுறங்கி நாளாச்சு.

எங்கிருந்து வந்தவன் நான்
யாரிடத்தில் போய்ச்சேர்வேன்
ஏனிங்கு வந்தவன் நான்
யாரிடத்தில் போய்க் கேட்பேன்.

வந்ததிலும் இன்பமில்லை
போவதிலும் துக்கமில்லை
பட்ட கடன் தீருமட்டும்
சொட்டுறங்கத் தாலாட்டு.

நான் அறிய தாலாட்டு
'நான்' அழிய தாலாட்டு
நானுறங்கத் தாலாட்டு
பட்ட கடன் தீருமட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10677

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொய்மை நிரம்பிய
காலத்தின்
இருட்குகையினுள்
உண்மையான
சத்தியக் கலைஞனை
புதைத்துவிட முடியாது!

காலத்தின் சித்து விளையாட்டினுள் இக்கவிஞனின் சிந்தனைக்கும் ஞானத்திற்கும் மோதலுக்குமிடையில் தப்பி நின்ற கவிதைகளைத் தேடி எடுத்துத்தான் இக்கவிதைத் தொகுதி பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இக் கவிதைத்தொகுதியின் கவிஞனை தரிசிப்பதற்கு இத்தொகுதியிலுள்ள ஒரு கவிதை போதுமென்றே நம்புகிறேன்! இக்கவிதைத் தொகுதியைப் பதிப்பிப்பதன் ஊடாக நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ்க் கவிதை வரலாற்றில் வேதாந்தியின் பணியையும் பங்களிப்பையும், பதிவாக்கியுள்ளேன் எனும் போது சந்தோசமடைகிறேன்.

எம் .பௌசர்
பதிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org